# கலைச்செல்வி

1-6



தோற்றம்: 1880 — மறைவு: 1958

யாழ் - தமிழ் இலக்கிய மன்றம்

மார்கழி 1958

35 சதம்

அழகு எங்கே?

உங்களிடமே இருக்கின்றது!

நம்பவில்லையா?

எங்களிடம் வாருங்கள்.

உங்கள் அழகான உருவத்தை

அப்படியே படம்பிடித்துக் கொடுக்கின்றோம்.

ஆண்டுகள் கழிந்தாலும்

அழகு கலையாத படங்கள்.

# பிறின்ஸ்

படப்பிடிப்பாளர்கள்,

சுன்னுகம்.

வரதர் வெளியீடு



# அம்மா! இதோ எனது புத்தகம்!

## தேன்மொழி வாசகம்

பாலர் கீழ்ப்பிரிவு

எழுதியவர் : **கே. க. கந்தசாமி**

பக்கத்துக்குப் பக்கம் அழகான வர்ணப் படங்களுடன் பதிப்பிக்கப்பெற்றது

**குழந்தைகள் ஆவலுடன் தாமே தேடி**
**எடுத்துப் படிக்கும் கவர்ச்சி வாய்ந்தது.**

**விலை சதம் -/50**

விற்பனையாளர் :

**ஆனந்தா அச்சகம் (புத்தகசாலை)**

226, கே. கே. எஸ். வீதி : : யாழ்ப்பாணம்

# யாழ்ரதம் ராக்ஸி

பிடியுங்கள்!

## மைலுக்கு 60 சதம்

* குறைந்த செலவில் வசதியான பிரயாணம்
* பணிவு, உற்சாகம், நேர்மையுள்ள சாரதிகள்
* நிதானமான சலார்—நீங்கள் கொடுப்பது மீட்டர் காட்டுவதையே
* வாக்குவாதம் வேண்டாம்—மீட்டரைக் கவனியுங்கள்
* பிரயாணிகள் இன்சூர் செய்யப்பட்டுள்ளனர்
* முக்கியமான இடங்களில் பிடிக்கலாம்

*டெலிபோன் இலக்கம் பின்னர் அறிவிக்கப்படும்.*

## யாழ்ரதம் லிமிடெட்,

மின்சார நிலைய வீதி : : யாழ்ப்பாணம்.



# சரஸ்வதி

## கலை இலக்கிய இதழ்

*மாதம் இருமுறை*

ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்கள்
ஒவ்வொரு இதழிலும் இடம் பெறுகின்றன.

தனிப்பிரதி 25 ந. பை. ஆண்டுச் சந்தா ரூபா 6.

## சரஸ்வதி

19, லாங்ஸ் கார்டன் வீதி, சென்னை - 2

*யாழ்ப்பாணத்தில் :—*

**தமிழ்ப் பண்ணை**

*193, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்.*

*Tele:* "GEEPEETEE" Estd. 1953

# ஞானபண்டிதன்

## ஜவுளிக்கடை

*புறெப் :* K. V. விஸ்வலிங்கம்

228, காங்கேசந்துறை ரேட் : : யாழ்ப்பாணம்.

சகலவிதமான பிடவைத் தினிசுகளும்
விலை சகாயமாகப் பெற்றுக்கொள்ளலாம்

IMPORTER

WHOLESALE & RETAIL

**TEXTILE MERCHANT**

# GNANAPANDITHAN TEXTILES

*Prop:* K. V. VISVALINGAM

228, K, K. S. Road : : Jaffna

உயர்ந்த ரகம்!
குறைந்த விலை!

உத்தரவாதம்.
நிறைந்த பலன்.

# மணியம் ஸ்ரோர்ஸ்.

53, கஸ்தூரியார் வீதி :: யாழ்ப்பாணம்.

எங்களிடம் சயிக்கில் சாமான்கள், கைக் கடிகாரங்கள், பெற்றோல் மாக்ஸ், சுவர்க் கடிகாரங்கள், மேசைக் கடிகாரங்கள், கிராமபோன், எலக்ரிக் குட்ஸ், ஒயில்மன் குட்ஸ் முதலான பலவித பொருட்களும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

## "நொறக்சா"

கைக்கடிகாரத்தின் ஏக விநியோகஸ்தர்கள்

# மணியம் ஸ்ரோர்ஸ்

உரிமையாளர் : T. சிவசுப்பிரமணியம்

ரெலிபோன் : 684 ரெலிக்கிராம் : மணியம் ஸ்ரோர்ஸ்

பால்போல் துணிகளை வெள்ளையாக்குவது?

**மில்க் வைட் சோப்.**

பயனில் உயர்ந்ததும் பணத்தில் மலிந்ததும்!

**மில்க் வைட் சோப்.**

சலவையில் துணிகள் கெடாமல்
வெண்மை செய்வது?

**மில்க் வைட் சோப்.**

சோப்பில் உயர்ந்தது சொகுசில் சிறந்தது
விலையில் குறைந்தது!

**மில்க் வைட் சோப்.**

உள்நாட்டில் தயாராகும் உயர்ந்த ரக
சோப்பை வாங்குங்கள்

சுத்தம் சுகம் தரும்

சுதேசி இன்றேல் சுதந்திரம் இல்லை.

**மில்க்வைட் சோப் தொழிற்சாலை,**
527, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# அறிவிப்பு

ஆசிரிய நண்பர்களினதும், மாணவர்களினதும் வேண்டுகோளுக்கு இணங்கி யாழ்ப்பாணத்தில் எங்கள் கிளை ஸ்தாபனம் ஒன்று நிறுவியிருக்கின்ரேம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்ரேம்.

கலைவாணி வெளியீடுகளும், மற்றும் வெளியார் வெளியீடுகளும் ஒருங்கே பெற்றுக்கொள்ளலாம்.


**கலைவாணி புத்தக நிலையம்**

பாடநூற் பிரசுரிப்பாளர்

10, மெயின் வீதி,

யாழ்ப்பாணம்

# கலைச் செல்வி

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்—பாரதியார்

| கலை 1 | மார்கழி 1958 | காட்சி 6 |
|---|---|---|

## பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| வாசகர் வாய்மொழி | 10 |
| கீழ்த்தர இலக்கியங்கள் | 11 |
| அன்பார்ந்த நேயர்களே | 12 |
| வித்தகர் கந்தையா | 13 |
| வைத்திய கலாநிதி அண்ணாமலை | 16 |
| மரியின் மகனே வருக! | 17 |
| கம்பர் தோற்றுவிட்டார் | 19 |
| இதயவானிலே | 22 |
| எழுத்துலகில் நான் | 25 |
| சந்தேகம்! | 28 |
| வாழும் இனம் | 34 |
| அணுவுள் ஓர் அதிசயம் | 37 |
| திருவிளையாடல் | 41 |
| தமிழன்னைக் கோவிலிலே ..... | 45 |
| இவரைக் கேளுங்கள் | 46 |
| கண்டதும் கேட்டதும் | 48 |
| நீதியரசர் நாகலிங்கம் | 50 |
| இனம் சிரிக்கிறது | 51 |
| வளருந்தமிழ் | 55 |
| அறிவரங்கம் | 56 |
| அண்ணாமலையென்னும் அருளாளன் | 58 |

அட்டைப்படம்: வித்தகப் பத்திராதிபர், காலஞ்சென்ற தென்கோவை பண்டிதர் ச. கந்தையாபிள்ளை அவர்கள்.

# வாசகர் வாய்மொழி

**கூட்டுப் பிரார்த்தனை**

கலைச்செல்வி நிலைத்து வாழ இறைவன் அருளை இறைஞ்சுகின்றோம்.

யோகேந்திரன்,
மனோகரன்.

திருநெல்வேலி.

*　　*

**அவரவர் அபிப்பிராயம்.**

'கலைச்செல்வி' போன்ற பத்திரிகைகளைத் தமிழகத்திலேயே விரல் விட்டு எண்ணிவிடலாம் என்பது என் திண்ணமான முடிவு.........

ப. இராஜாராம்.

தஞ்சாவூர்.

*　　*

**சிந்தனை செய் மனமே!.**

"செல்வி" எல்லோரது சிந்தனையையும் மேன்மேலும் தூண்டச் செய்கின்றது !

திருமதி க. இரத்தினசிங்கம்.
கிளிநொச்சி.

*　　*

**கடிதமும் கைப்பழக்கம்!.**

கல்லையும் கனியச் செய்யும் 'காவலூர் அம்பி'யின் கதையைக் கன்னிப் படைப்பு என்கின்றீர்களே நாம்நம்பிவிடுவோம் என்று?

ரமணி.

பருத்தித்துறை.

*　　*

**எங்களுக்கு மட்டும்.**

நாகராஜனின் கதை, கவிதையே! என் போன்ற வாசகர்களை வெகுவாகக் கவர வல்லது.

எஸ். பொன்னுத்துரை.

மட்டக்களப்பு.

**வீசி விட்டார்!**

தருமம் செய்வதைத் தம்பட்ட மடிக்கும் தம்பிரான்களுக்கு 'மஹா கவி' அறிவுரைகளை அள்ளி வீசியுள்ளார்.

அருமைநாயகம்.

திருமலை.

*　　*

**திருவருளை முன்னிட்டு......**

அருளை முன்வைத்தே கலையை வளர்க்க வேண்டும். அருளின்றிக் கலையை வளர்க்க முடியாது......

ப. காங்கேயன்.

உடுவில்.

*　　*

**ஓசி மகிழ்ச்சி.**

கலைச் செல்வியின் வளர்ச்சியை இரவல் வாங்கிப் பார்த்துத்தான் மகிழவேண்டியிருக்கிறது......

கனகரத்தினம்.

குப்பிளான்.

*　　*

**அன்பே ஆரமுதே!**

அமுதும் தேனும் எதற்கடி நீ அருகிலுள்ளபோது?

நடராஜன்.

இரத்தினபுரி.

*　　*

**ஒரு கேள்வி!**

கடைசித் தடவையாகக் கேட்கின்றேன், எமது சந்தேகங்களை அகற்ற கேள்வி-பதில் பகுதியை ஆரம்பிக்கமாட்டீர்களா ?

பட்டுச்சாமி.

வட்டகொடை.

**மனக்கோவில்**

மனக்கோவில் ஈன்ற மணற்கோவில் மன்னிற்
றெனக் கோவில் இன்பமாண் பீந்து.

வண்ணை.

க. வை. ஆ. சர்மா.

# கீழ்த்தர இலக்கியங்கள்

இந்தியா தாய் நாடு; இலங்கை சேய்நாடு. நமது மொழி, மதம், கலை, கலாச்சாரம்—எல்லாம் இந்தியா நமக்களித்த செல்வங்கள். கடல் பிரித்தாலும் கருத்தால் பிரியாத நாடுகள் இவையிரண்டும்.

என்றாலும், எல்லா விஷயங்களிலும் இலங்கை மக்களுக்கெனத் 'தனித்தன்மை' ஒன்றுண்டு. ஆனால் அதற்காக எவருமே இந்தியாவை அன்னிய நாடாகக் கருத வேண்டியதுமில்லை; கருதுவதுமில்லை. அங்கு ஏற்படும் அரசியல், சமுதாய மாறுதல்கள் நம்மைப் பாதிக்கத்தான் செய்கின்றன. முக்கியமாக, இலக்கியத்துறையில், வெவ்வேறு நாடுகள் என்ற வேற்றுமையின்றி வாழ்ந்து வருகின்றோம். தமிழகத்தில் தயாராகும் புத்தகங்கள் ஏராளமான அளவில் இங்கு இறக்குமதியாகின்றன. சிறந்த இலக்கிய நூல்கள், இலக்கியப் பத்திரிகைகள் என்றுமே இங்கு வரவேண்டும்; எமக்கு அறிவின்பம் நல்க வேண்டும் என்று விரும்புகின்றோம்

ஆனால்......!

இலக்கியம் என்ற பெயரில் வெளியாகும் எல்லாவற்றையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமா? இலக்கியச் சந்தையிலே துப்பறியும் "காய்களும்" ஆபாசப் "பழங்களும்" ஆயிரக் கணக்கில் விற்பனையாகின்றன. மயிர்க் கூச்செறியும் மர்ம நிகழ்ச்சிகள், திடுக்கிடும் சம்பவங்கள், உதிரத்தை உறைய வைக்கும் உரையாடல்கள், ஆபாசத்தை அள்ளி வீசும் அரை நிர்வாணப் படங்கள் – இளைஞர்களின் மனதைப் பாழாக்குகின்றனவே தவிர, பண்படுத்தவில்லையே! வாசகர்கள் விரும்புகின்றார்கள் என்பதற்காக "கீழ்த்தர உணர்ச்சி"களைத் தூண்டிவிட்டுக் காசு பறிப்பதுதான் இலக்கிய சேவையா? ஏராளமான பணத்தை ஏற்றுமதி செய்து, எதற்குமே உதவாத குப்பை கூளங்களை இறக்குமதி செய்ய எவர்தான் விரும்புவர்?

'பகிஷ்கரிப்பு இயக்கம்' என்று ஏதாவது ஏற்பட்டால், மனக் கசப்புத்தான் மிஞ்சும்.

ஆகவே இந்தக் "கீழ்த்தர இலக்கியப் படையெடுப்பை" நிறுத்த முயற்சி எடுக்கும்படி, பண்பட்ட தமிழறிஞர்களையும், பிரபல பிரசுரகர்த்தாக்களையும் ஈழத் தமிழ் மக்களின் சார்பாக வேண்டுகின்றோம்.

# அன்பார்ந்த நேயர்களே!

வணக்கம். கவிதைப் போட்டிக்கு இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் பல கவிஞர்கள் அனுப்பிய கவிதைகளை நீதிபதிகள் இப்பொழுது பரிசீலனை செய்து வருகின்றனர். பொங்கலிதழில் தங்கப் பதக்கம் பெறும் கவிஞரின் பெயரை வெளியிட முடியுமென நினைக்கின்றோம். மாணவர் கட்டுரைப் போட்டியின் முடிவுகள் அடுத்த இதழில் வெளியாகின்றன.

பொங்கல் மலர் வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. இதுவரை எந்தப் பத்திரிகையிலும் இடம் பெறாத பல புதிய அம்சங்களும் தலை சிறந்த எழுத்தாளர்களின் கருத்துப் படையல்களும் மலரில் இடம்பெறுகின்றன. வளரும் எழுத்தாளர்கட்கு ஊக்க மூட்டும் செய்தியொன்றும் வெளிவரும்.

'கலைச்செல்வி' இப்போது அரை ஆண்டுக் குழந்தை. உங்கள் ஆதரவுடன் அநேக ஆண்டுகட்கு நிலைத்து நின்று தமிழ்ப்பணிசெய்வாள் என்பது திண்ணம்.

கொழும்பு குமரகுரு, நல்லூர் சிவஞானசுந்தரம், கல்வயல் முருகையன், கொழும்பு நவரத்தினம், காரைநகர் சிற்றம்பலம், நல்லூர் அன்னபூரணம் ஆகியோர் சந்தாதாரர்களைச் சேர்த்துதவியுள்ளார்கள். இவர்கட்கு நமது நன்றி.

கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துக்களை எல்லோருக்கும் தெரிவிக்கின்றோம்.

## மணிவாசகர் விழா.

டிஸம்பர் 23, 24, 25-ந் திகதிகளில் காரைநகர் சிவன் கோவில் மண்டபத்தில் நடைபெறும். பல அறிஞர்கள் சொற்பொழிவு ஆற்றுவார்கள். அனைவரும் வருக.

மணிவாசக சபை,
காரைநகர்.

முதலியார் குல. சபாநாதன் "ஸ்ரீலங்கா" இதழின் ஆசிரியர் சரித்திரத் தொடர்புடைய கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளார். பண்டிதர் அவர்களுடன் நெருங்கிப் பழகிய பண்பாளர்.

## தென்கோவை, பண்டிதர்

# வித்தகர் கந்தையாபிள்ளை

— குல-சபாநாதன் —

சில ஆண்டுகளுக்கு முன்னர் வித்தியா கந்தோரில் கணக்காளராகக் கடமையாற்றிய திரு. ஜி. இராசதுரை அவர்கள் 'வித்தகம்' என்ற பத்திரிகையின்பிரதியொன்றினை என்னிடம் தந்து "இதனைக் கிரமமாகப் படித்துவாரும்" என்று கூறினர்கள். உயரிய சமயக் கருத்துக்களையும் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் தன்னகத்தே தாங்கி வெளிவந்த வித்தகம் அக்காலத்தில் தமிழகத்திற் செல்வாக்குப் பெற்றிருந்தது. இத்தகைய சிறந்த சஞ்சிகைக்கு ஆசிரியராக விருந்தவர் ஈழநாட்டுப் பண்டிதர் ச. கந்தையாபிள்ளை யவர்களே எனக் கேள்விப்பட்டிருந்தேனே தவிர, அவருடைய தமிழ்ப் புலமையைப் பற்றியோ வித்தகக் கொள்கையைப்பற்றியோ அறிந்திருக்கவில்லை. ஆனல் பண்டிதர் அவர்கள் புதுச்சேரியிலிருந்து "வித்தகம்" என்னும் பத்திரிகையை நடாத்திய பின்னர் இலங்கைக்கு வந்துசேர்ந்தார்கள். அக்காலத்தில் பண்டிதர் அவர்களுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

பண்டிதர் கந்தையாபிள்ளை அவர்கள் தெற்குக் கோப்பாயிற் பிறந்தபடியால், தென்கோவை கந்தையாபிள்ளையென்றே பலரும் அழைத்தனர். இருபாலையும் கோப்பாயும் பத்தொன்பதாம் நூற்றுண்டில் கலைமகள் பீடமாக விளங்கின. பண்டிதர் அவர்களின் தாயார் இருபாலைச் சேனதிராயரின் வழித்தோன்றல்என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. தந்தையார் பெயர் சபாபதிப்பிள்ளை என்பது.

பிள்ளையவர்கள் இளமையிலே தென்கோவைச் சின்னப்பாபிள்ளை என்பவரிடம் தமிழ் கற்று வந்தார். இவரிடம் மறைசையந்தாதி, நைடதம் முதலிய நூல்களைக் கற்ருர். அதனேடு கோப்பாயிலிருந்த சி. எம். எஸ். பாடசாலையில் ஆங்கிலமும் தமிழும் கற்ருர். அதன் பின்னர் சில வருடம் "உதயபானு" பத்திராதிபர் சரவணமுத்துப்பிள்ளையிடம் இலக்கண இலக்கியமும் சித்தாந்த நூல்களும் கற்ருர். பின்னர் மட்டக்களப்பில் கச்சேரி முதலியாராக விருந்த வித்வான் சிற். கைலாசபிள்ளையவர்களுடைய கேள்விப்படி அவ்விடம் சென்று புளியந்தீவுச் சைவவித்தியாசாலையில் பிரதம ஆசிரியராகக் கடமை

யாற்றினர். அகவல் படிக்கும் வகையினை இவரிடமிருந்து கந்தையாபிள்ளையவர்கள் அறிந்து கொண்டார்கள். பின்னர் 1902-ம் ஆண்டில் யாழ்ப்பாணம் வந்து சுன்னுகம் குமாரசுவாமிப்புலவர் அவர்களிடமும் பாடங்கேட்டு வந்தார். புலவர் அவர்கள் கைம்மாறு கருதாது தமக்குச் செய்த உதவியை நினைந்து நினைந்து உருகிக் கண்ணீர்விட்டதை யான் பன்முறை காணநேர்ந்தது.

பிள்ளையவர்கள் 27-வதுவயதில் பெற்றோரின் விருப்பத்துக்கிணங்க மணஞ் செய்து கொண்டார்கள். பின்னர் கொழும்பு ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராகக் கடமையாற்றினர். ஹவாட் துரையவர்களுடைய உதவியால் வித்தியா கந்தோரில் தமிழ்மொழி பெயர்ப்பாளராக 1920-ம் ஆண்டு வரை கடமையாற்றினர். அக்காலத்தில் கொழும்பு விவேகானந்த சபையிலே தமிழ் வகுப்பு வைத்து நடாத்தி வந்தார்கள். வழக்கறிஞர் திரு. மு. திருவிளங்கம் எழுதிய சித்தாந்த நூல் உரைகளுக்கு பண்டிதர் கந்தையாபிள்ளையவர்களும் ஓரளவு உதவி செய்திருக்கிறார்கள். 1923-ம் ஆண்டளவில் பிள்ளையவர்கள் நாட்டுக் கோட்டைக்குச்சென்று கீழைச்சீவல் பட்டியில் தமிழ் ஆசிரியராக அமர்ந்தார். சிறிது காலத்துள் அப்பதவியிலிருந்துவிலகி, புதுச்சேரிக்குச் சென்றார். அங்கே சமய உண்மைகளை ஆராயும் துறையில் ஈடுபட்டார். “புதுச்சேரியில் நந்தியெம்பெருமான் அருளால் பல உண்மைகளையும் முத்திநிலை இன்னதென்பதையும் அறியும் பாக்கியம் பெற்றேன். இவ்வுண்மைகளைத் திருவாசகம், திருமந்திரம் முதலிய சுருதிப் பிரமாணங்களோடு வித்தகவாயிலாக வெளியிடலானேன்” என்று கூறியிருக்கின்றார்கள். பண்டிதர் அவர்கள் “மூவடி முப்பது” எனும் நூலுக்கு விரிவான உண்மைப் பொருளுரை எழுதியிருக்கின்றார்கள். இடைக்காடர் இயற்றிய “மூவடி முப்பது” எனும் நூலுக்கு இதுவரை புலவர்கள் கூறிவந்த உரைக்கு முற்றிலும் வேறுபட்ட உரை கண்டவர் நம் பண்டிதர் அவர்கள். கெட்ட குணமெனப்படுவனவற்றிலும் சிற் சில நன்மைகள் உண்டு என்பதை விளக்கும் நூலாகவே மூவடி முப்பது எனும் நூல் இதுவரை கருதப்பட்டு வந்தது. ஆனல் இந்நூல் சமய உண்மைகள் பொதிந்த தங்கச் சுரங்கம் என்பது பண்டிதர் அவர்களின் கருத்து. அதற்கேற்ற உரையும் எழுதியுள்ளார்.

பண்டிதரவர்கள் ஆடம்பரமற்ற வாழ்க்கையை விரும்புவராதலால், தமது தமிழறிவைப்பற்றி விளம்பரஞ்செய்வதில் ஈடுபடவில்லை. ஆனல் அவருடைய உள்ளம் “வித்தக”க் கொள்கையில் ஊறிக்கிடந்தது. அவருடன் உரையாட விரும்பினல் ‘வித்தக’க் கொள்கையயப்பற்றி இரண்டொரு கேள்வி கேட்டுவிட்டால் மணித்தியாகலக் கணக்கில்பேசிக் கொண்டேயிருப்பார்கள்.

வித்தகப் பத்திராதிபர் அவர்களைக் கந்தரோடையில் ஒருமுறை

சந்தித்தபொழுது வித்தகம் என்பதன் பொருள் என்ன என்று கேட்டேன். உடனே நீண்டதோர் சொற்பெருக்காற்றினர். அதன் சாரம் இது: பண்டைய இருடிகள் முனிவர்களாலும் மணிவாசகர் மூவர் முதலிய மெய்யடியாராலும் ஆழ்வார் பெருமக்களாலும் சித்தர்களாலும் தத்தம்சொல்லாலும் அரும்பெரும் செயலாலும் நிலைநாட்டப்பட்டதும், சத்திசிவ வடிவாகிய உடலுயிர் அமலமடைந்து அருள்வடிவாய் ஞானாகாசமாகிய பரத்தில் ஒடுங்கிச் சிவாங்கமாதலாகிய உண்மைச் சைவமுந்தியே வித்தகம் நுதலிய பொருளாகும்.

சமயக்கொள்கைகள் பற்றியும் முத்திப்பேற்றின் இலக்கணம் பற்றியும் கருத்துவேற்றுமைகள் பல உள. வித்தகப் பத்திராதிபர் தாம் சரியெனக்கண்ட ஒரு கருத்தை அடிக்கடி தம் கட்டுரைகளில் வலியுறுத்திவந்துள்ளார். பல்லாண்டுகளாக மறைந்திருந்த உண்மைகளைத் தாம் வித்தகவாயிலாக விளக்கியதன்றி, தாமே புதிதாக எதனையும் சொல்லவில்லையென்பதை அடிக்கடி நினைவூட்டி வந்தார்கள்.


பண்டிதர் கந்தையாபிள்ளையவர்களுடைய சமயக்கொள்கையைச் சிலர் ஏற்றுக்கொள்ளாதிருப்பினும் அவருடைய ஆழ்ந்த தமிழறிவைஎற்றுக்கொள்ளத் தயங்கவில்லை. கவி இயற்றும் வன்மை வாய்க்கப்பெற்றவராதலின் அநேக கவிகளும்இயற்றியுள்ளார். இவருடைய கவிகளை ஈழநாட்டுப் புலவர்களும் இந்தியநாட்டுப் புலவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். அடியேனுடைய வேண்டுகோட்கிணங்கி, மேலைக்கரம்பன் முருகமூர்த்திமீது பக்திப்பாடல்களும் இயற்றியுள்ளார்கள்.

பண்டிதர் அவர்கள் தமது பிற்கால சீவியத்தைக் கந்தரோடையிற் கழித்து வந்தார்கள். அக்காலத்திலும் வித்தகக் கொள்கையைப்பற்றியே ஆராய்ந்துகொண்டிருந்தார்கள். ஆழ்ந்தகன்ற கல்விக்கேற்ற அடக்கமும் ஒழுக்கமும் பண்டிதரவர்களிடம் காணப்பட்டன. திருமுருகாற்றுப்படையினையும் சிலப்பதிகாரத்தையும் இவர்கள் படிக்கும்போது கேட்பது தனிப்பேருவகையளிப்பதாகவிருக்கும். உலகமுவப்ப என்று தொடங்கிவிட்டார்கள் என்றால் தமக்குரிய இருமல் நோயையும் புறக்கணித்து உரத்த குரலில் இனிமையாகப் பாடிமுடித்துவிடுவார்கள்.

மகாவித்வான் கணேசையர் அவர்கள் இவ்வுலகவாழ்வை நீத்த சிலதினங்களுள் அவருடைய நண்பரும் வித்தகப் பத்திராதிபருமாகிய பண்டிதர் கந்தையாபிள்ளையவர்களும் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்கள். எனினும் அவர் கண்ட வித்தகக்கொள்கையும் இயற்றிய கவிகளும் அவருடைய புலமையை ஞாபகமூட்டிக்கொண்டிருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. பண்டிதர் அவர்கள் சென்ற ஆண்டில் இயற்றிய மேலைக் கரம்பொன் முருகவேள் துவாதச தோத்திர மஞ்சரி எனும் நூலிலிருந்து ஒருசெய்யுள்மட்டும் ஈண்டெடுத்துக்காட்ட விரும்புகிறேன்

"பொல்லாத புலாற்றுருத்தி பூந்துருத்தியாய் நிலவப்புனிதமாக
நில்லாத பவுதிகபஞ்சீகரண நிறைமாற்றும் நிமலாபோற்றி
சல்லாப விநோதனே! சாந்தசிவ சண்முகனுந் தலைவா! போற்றி
மல்லாருந் தடம் புடைசூழ் கரம்பொன்னும் பதிபுரக்கும்
வரதா போற்றி.

# வைத்திய கலாநிதி அண்ணாமலை



ஆடம்பரமின்றி அமைதியோடிருந்து ஆயிரமாயிரம் பேர்களின் நோய்களை அனுதினமும் தீர்த்து வந்த அண்ணாமலை அவர்கள் சென்ற 26-11-58ல் மரணமடைந்து விட்டார் என்பதையே நம்ப முடியாமலிருக்கின்றது. இரண்டு மாதங்களுக்கு முன்புதான் 'கலைச்செல்வி'யின் சார்பில் "அண்ணாமலைப் பரியாரி"யைப் பேட்டிகண்டு, அவரது அருமருந்தன்ன அறிவுரைகளைப் பெருவிருந்தாகப் படைத்தோம். இவ்வளவு விரைவில் அவரது மரணத்தைப் பற்றியும் எழுத நேர்ந்துவிட்டதே! இந்துக்கள் முஸ்லிம்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய எல்லோருக்கும் அவரது சேவை தாராளமாகக் கிடைத்திருக்கின்றது. தன் காணி பூமிகளை விற்று வைத்திய சேவை செய்ய இத் தன்னலமற்ற தவமுனியின் திருவுருவை எவருமே மறக்க மாட்டார்கள். என்றாலும் மனித குலத்திற்கே வழி காட்டியாக விளங்கிய இப் பெரியாரைக் கௌரவிக்கும் சீரிய கடமை நமக்குண்டு. "சென்னை மக்கள் டாக்டர் ரங்காச்சாரிக்குச் சிலையெழுப்பிக் கௌரவித்ததைப் போன்று நாமும் அண்ணாமலை அவர்களைக் கௌரவிக்க வேண்டும் என முன்னைநாள் உதவிக் கல்வி மந்திரி திரு. கனகரத்தினம் குறிப்பிட்டுள்ளார். தகுதி வாய்ந்த பிரமுகர்கள் எடுக்கும் முயற்சிக்கும் தமிழ் மக்களின் ஆதரவு தவறாது கிடைக்கும். முயற்சி வெற்றிபெறும் நாளை முழு மனதுடன் எதிர்பார்க்கின்றோம்.

டிசம்பர் 25, கிறிஸ்தவர்கட்குப் புனித தினம்; நத்தார் தினம்.
அதை யொட்டி இக் கவிதையை வெளியிடுகின்றோம்.

# மரியின் மகனே வருக!

— நாவேந்தன் —

---

மாரி நடுக்குங் குளிரினிலே
மரியின் மடியில் மனுவுருவாய்
பாரின் பாவந் தொலைக்க வரும்
பரனே வருக பாவநரர்
சேரின் நின்னைத் தீநரகஞ்
சேரார் என்றே செய்ய மறைப்
பேரின் வழியே ஒளிகாட்டும்
பேறே வருக, வருகவே! 1.

விண்ணின் றிழிந்திம் மண்ணுலகின்
வெய்ய கொடுமைப் பவம் போக்கத்
தண்ணென் றருளும் எழில் முகமும்
தடுத்தாட்கொள்ளும் திருக்கரமும்
பண்ணென் றமையும் கனி மொழியும்
பாவந் தீய்க்குந் திருத்தாளும்
எண்ணென்றெம்முன் காட்சி தரும்
இறையே வருக வருகவே! 2.

எல்லாத் தீங்கும் இங்குற்றே
இடரு(ள்) ஆழ்ந்து மாய்கின்ற
பொல்லாக் குணத்தோர் செய் பாவப்
புன்மை போக்க வந்துற்ற
நல்லாய் வருக ஏசுவெனும்
நாதா வருக நானிலத்தே
சொல்லாம் வேதப் பொருள் சாற்றத்
தோன்றுஞ் சுடரே வருகவே! 3.

கொல்லுங் குளிரிற் பனிக்காற்றில்
குடிசை மிசையோர் புல்லணையில்
நல்ல பசுக்கள் புடைசூழ
நாதா புனிதச் சிறுமகவாய்
வெல்லக் குரலில் வாய்மலர்ந்து
வேதப் பொருளை விளம்பிடவே
சொல்லற் கரிய வானீங்கித்
தோன்றுஞ் சுடரே வருகவே! 4.

ஆணும் பெண்ணு மானோர்கள்
அறிவில் வாழ்வில் அந்தகராய்க்
காணும் நெறிகள் பிறழ்ந்தெல்லாம்
கைகாலற்ற முடங் கூனாய்
நாணும் படிவாழ் ஊமையராய்
நாளும் நலிதல் போக்கிடவே
பூணுங் கோல மிதுவேயோ
புனிதா! வருக வருகவே! 5.

**பல ஆண்டுகளுக்கு முன் சிறந்த நகைச்சுவைக் கட்டுரைகளை எழுதியவர் அநுசுயா. இலங்கை வானொலியினரின் தங்கப் பதக்கப்பரிசு பெற்ற தமிழ்க் கவிஞர். "கம்பரின் தோல்வி" சிரிக்க உதவும்; சிந்திக்கத் தூண்டும்.**

# கம்பர் தோற்றுவிட்டார்!

**— அநுசுயா —**

இத் தலைப்பைக் கண்டவுடன் "இராமாயணம் இயற்றிய கவிச் சக்கரவர்த்தி கம்பர்தான் தோற்றுவிட்டாரா?" என்று, கேட்டுக் கொண்டு வாசகர்கள் பலர் ஆத்திரம் ஆத்திரமாக வாசிக்கத் தொடங்குவார்கள். கம்பதாஸர்கள், அன்பர்கள், அபிமானிகள் எல்லோருமே துடிதுடிப்பார்கள். இராமாயணத்தைப் படித்து ரசித்த லட்சக்கணக்கான தமிழர்கள் மாத்திரமா! சுப்பிரமணிய முதலியாரின் ஆங்கில இராமாயண மொழி பெயர்ப்பைப் படித்துவிட்டு மில்ற்றன் முதலிய மேற்கு நாட்டுப் புலவர்களிலும் பார்க்க மேம்பட்டவர் கம்பர் என்று நம்பிக்கொண்டிருக்கும் ஆங்கில அறிஞர்களெல்லாம் ஆச்சரியக் கடலில் முழுகுவார்கள்.

ஆச்சரியப்படும் வாசகர்களெல்லாம் எப்போது? எங்கே? எந்தப்போட்டியில்? கம்பர் தோற்றுவிட்டார் என்று அறிய அங்கலாய்ப்பார்கள். பலர் இதுவெறும் பொய்க்கதையென்றே எண்ணவுங் கூடும். ஆனல் நானே பொய் இன்னதென்று அறியாதவன். அந்தக் காலத்திலே அரிச்சந்திரன் அயோத்தியை ஆண்டபோது அங்கு வாழ்ந்த சத்தியவான்களுள் ஒருவர் எங்களூரில் வந்து குடியேறினர். அவருடைய வம்சத்தில் பிறந்தவன் ஒருவன் தான் நான். ஆகையால் நான் மருந்துக்கும் பொய் பேசி—எழுதி—அறியேன். கம்பர் போட்டியில் தோற்றது உண்மை. அதுவும் 1958-ம் ஆண்டிலே ஆவணி மாதத்திலே நடைபெற்ற சங்கதிதான் இது. விபரத்தைச் செல்லுகிறேன் கேளுங்கள்.

இலங்கையிலே கல்வி வளர்ந்து வருகிறதாம். ஒவ்வொரு கல்லூரியும் வருடா வருடம் நூற்றுக்கணக்கான மாணவர்களைச் சோதனை என்னும் கடலைத் தாண்டச்செய்து வேலையில்லாத் திண்டாட்டம் என்னும் நெருப்பிலே குதிக்க வைக்கின்றது. இது மாத்திரமா? பாடசாலையில் நடைபெறும் கல்வியிலும் பார்க்க விளையாட்டுக்கே முதலிடங் கொடுத்து நாட்டை வளர்க்கிருர்கள். ஒரு கல்விச்சாலையின் கட்டிடங்கள் இருக்கும் நிலப்பரப்பிலும் பார்க்க அதன் விளையாட்டு நிலம் மிகப் பெரியதாக இருப்பதனல் கல்வியிலும் பார்க்க விளையாட்டுக்கு முதலிடம் கொடுக்கப் படுவது அத்தாட்சி ஆகிறதல்லவா! பாடசாலைகளில் இந்த விளையாட்டு இல்லாவிட்டால் மாணவர்

கள் சூம்பிச் சோர்ந்து போவார்கள் என்று ஏங்குகிறார்கள் கல்வித் தலைவர்கள். இதற்காக எவ்வளவு செலவுகள் நடைபெறுகின்றன! சுப்பிரமணிய பாரதியாரும் "செலவு தந்தைக்கு ஆயிரம் சென்றது தீது மைந்தர்க்குப் பல்லாயிரம் சேர்ந்தது" என்று கண்ணீர் வடித்தார். இது மாத்திரமா? இந்த விளையாட்டுக்கள் போட்டி முறையில் நடைபெறுவதனால், கல்விச்சாலைகள், ஒன்றுக் கொன்று மனஸ்தாபம் ஆசிரியர்களுக்குள் வெறுப்பு! மாணவர்களுக்குள் பொறாமை! இந்தப் போட்டியும் பொறாமையும் படிக்கும் போதே வளர்ந்ததானால் இவர்களின் பிற்கால வாழ்விலும் இவை பரிணமித்துக் கொண்டே வருகின்றன. சங்கக்கடை அங்கத்தவர் தெரிவு தொடக்கம் பாராளுமன்றத்தெரிவு வரையும் பல கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுவதற்குப் பள்ளிக்கூடத்தில் பயின்ற போட்டிதான் மூல காரணம் என்பதை எனதுகூழைப் புத்தி திடமாக ஏற்றுக்கொள்ளுகின்றது. ஆனால் நீளப் புத்தியுடைய "பிறின்சிபல்" மாருக்கு இவைகள் தெரியாதுதானே! ஆண்பிள்ளைகள் மாத்திரமா போட்டியிடுகிறார்கள்! அமைதிக்கும் அடக்கத்துக்கும் இலக்கணமாக வாழவேண்டிய பெண்பிள்ளைகளையுமல்லவா இந்தச்சனியன் பிடித்துக்கொண்டது. ஆயிரக்கணக்கான ஆண்கள் — வாலிபர்கள் — காணத் தக்கதாக அரைகுறை உடைகளை உடுத்துக்கொண்டு இந்தக் குமர்ப்பொடிச்சிகள் விளையாடும் கும்மாளத்தை என்னென்று எழுதித்தள்ளுவது!

ஒரே ஒரு மேனகையின் உடலசைவைக் கண்டு தவசிரேஷ்டரான விசுவாமித்திரரே தந்நிலை கெட்டுத் தவறினாரானால் சாதாரண ஆண்பிள்ளைகளைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? இந்தப் பெண்டுகள் தேகப்பயிற்சிக்காகச்செய்ய வேண்டிய வீட்டுவேலைகள் பல இருக்கின்றனவே! இவைகளை இவர்கள் செய்யக்கூடாதா? கைக்குத்தரிசி இல்லாமையினாற்றான் 75 வீதமான நோய்கள் உண்டாகின்றன வென்று சுகாதாரப்பகுதி சாட்சிசொல்லி வருவதை தலைச்சட்டம்பிமார் சற்றுஞ் சிந்திக்கிறார்களில்லையே;பெண்பிள்ளைகள் நெல்லுக்குத்தலாகாதா? அல்லது ஆண்கள் காணாத இடங்களில் கூடி நின்று பொழுது போக்கமுடியாதா?

இதென்ன? கம்பர் தோற்றுவிட்டார் என்று தொடங்கி விளையாட்டைப்பற்றி எழுதுகின்றேன் என்று வாசகர்கள் குழப்பமடையக்கூடும், — கோபிக்கவும் பார்ப்பார்கள். ஆனால் அதற்குத்தான் இவையெல்லாம் பீடிகை. ஒரு பெண் கல்விச்சாலையில் விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. மாணவிகளெல்லாரும் மூன்று இல்லங்களாகப் பிரிக்கப்பட்டார்கள். "வள்ளுவர்" இல்லம், "கம்பர்" இல்லம், "இளங்கோ" இல்லமென்று அப்பிரிவுகளுக்கு நாமகரணம் சூட்டப்பட்டது. விளையாட்டு மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்

தது. கம்பர் இல்லத்தின் "கப்டி" ஞகிய மாணவியின் உடுப்பு மிக உயர்ந்து இருந்தது. விளையாட்டின் மிக நெருக்கடியான கட்டத்தில் அவள் தடக்கி விழுந்தாள். உடுப்பு அவலட்சணமாயிற்று! ரசிகர்கள் அடக்கத்தையும் மீறிச் சத்தமிட்டார்கள். பொடிச்சிக்கு வெட்கமாய்ப் போய்விட்டது! அவள், பின்பு விளையாடவேயில்லை. அதனுல் புள்ளிகள்குறைந்து மூன்ருவது இடத்தைக் கம்பரில்லம் பெற்றுத் தோல்வியடைந்தது. "கம்பர் தோற்றுவிட்டார்" என்று சொல்லிக் கொண்டே விளையாட்டு ரசிகர்கள் வெளியேறினுர்கள்!

---

## அரி - அரிவி - அருவி - இருவி

நெற்ருள் வெட்டுதலை அருவி வெட்டுதல் என எழுதுகிறேம். நெற்கதிர் கொய்தலை அரி—அரிவி வெட்டுதல் எனல் மரபு. திணையின் தாளை வெட்டுதலை அருவி —இருவி வெட்டுதல் எனல் மரபு. இன்று நெற்கதிர் கொய்தலின்றி, தாளையும் வெட்டுதலின் அருவி வெட்டுதல் என வழங்குகிறது போலும்.

வ. நடராஜா

## ஓசி

சமீப காலத்தில் தமிழில் இறக்குமதியான சொல் "ஓசி" நாம் பணம் கொடுக்காது மற்றையோரின் பொருளைப் பாவிக்கும் போது "ஓசி" என்கிறேம். Others' Cost என்ற தொடரின் முதலெழுத்துக்களான O C என்பவையே "ஓசி" என்ற புதுச் சொல்லாகப் பேச்சுத் தமிழில் வழங்குகின்றது.

தொடர்கதை

# இதயவானிலே

— உதயணன் —

## 7. உதயமானதே

**ரயில் நின்றது.**

இறங்கிய சந்திரன் யந்திரம் போல நடந்தான். மீனு வீட்டு வாசலில் கட்டப்பட்டிருந்தவாழை மரங்கள் அவனுக்குச் சோககீதம் பாடி வரவேற்புத் தந்தன. கூட்டம் கூட்டமாக மக்கள் கூடியிருப்பது போலத் தோன்றியது. தலை குனிந்தபடி தன் வீட்டில் நுழைந்தான்.

பெட்டி படுக்கையை எறிந்து விட்டுத் தன் அறைக்குள் சென்று தாழ்ப்பாள் இட்டுக் கொண்டான். அவனுடைய இதயத்தைப்பிளந்து கொண்டு குபீர் என்று பெருகியது கண்ணீர். அவனுடைய இதய வானம் இருண்ட வானமாகிவிட்டதா? வாழ்க்கைப் பொழில் வரண்ட வனமாகிவிட்டதா? அவன் கண்களுக்குக் குளிர்ச்சியை ஊட்டிய முழுமதியை மூடிக் கொண்ட முகிற் கூட்டங்கள் விலகவே மாட்டாதா?

அவனுடைய கண்ணீர்த் திரையில் இறந்துபோனகாலச்சேற்றில் புதைந்துபோன ஒரு நிகழ்ச்சி மிதந்து வந்தது.

பயிற்சிக்காலம் முடிந்து, கடைசிப் பரீட்சையும் முடிநது மாணவர்கள் தங்கள் தங்கள் வீடுகளுக்குச் செல்ல ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர். சந்திரனுக்கு ஏனடா இத்தனை கெதியில் பயிற்சிக்காலம் முடிந்தது? என்று எரிச்சலாக இருந்தது.

அன்று, வயது வந்த வாலைக் குமரியாக மீனுவை முதன் முதலாகச் சந்தித்த மாமரத்தடியில் சென்று உட்கார்ந்தான் சந்திரன். தெற்கில்...... ஒரே வெளிப்பிரதேசம். அதன் மத்தியில் மக்களெல்லாரும் ஏற்றத் தாழ்வின்றி உரிமை கொண்டாடக் கூடிய ஓர் இடம்; காதலுக்குத் தம் அறிவை அடகு வைத்து விட்டவர்களும் அறம் வளர்த்தோரும் எல்லோரும் சந்திக்கும் ஒரு பொதுவான இடம். ஷேக்ஸ்பியர் கண்ட ரோமியோ தன் காதலியை அணைத்துக் 'கொள்ள — கடைசி முறையாக என்றைக்கும் அகலா வண்ணம் அணைத்துக் கொள்ள உதவிய ஓர் இடம்; மயானம்!

மயானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு சிந்தனைச் சுழலில்

அகப்பட்டுத் தத்தளித்துக்கொண்டிருந்த சந்திரனுக்கு மீனு அருகில் வந்து நின்று "சந்திரன்" என்று அழைத்தது காதில் விழவில்லை.

"சந்திரன்...!" என்று மீனு மீண்டும் அழைத்தாள்.

"...ம் மீனுவா...வா!" என்றுன். அவனுடைய பேச்சில் சீவனில்லை.

"என்ன ஆழ்ந்த யோசனையில் இருக்கிறீர்கள்?" என்றுள் மீனு.

"ஆமாம், மீனு! இன்று நாங்கள் பிரிந்துவிட்டால் என்றைக்குச் சந்திக்கப்போகிறேம்! என்றைக்கு மீண்டும்பேசி மகிழப்போகிறேம்!" என்று நெட்டுயிர்த்தான்.

"வாணியிருக்கும் வரை எமது தொடர்பு என்றைக்குமே அஸ்தமித்துப் போகமாட்டாது. எல்லா வகையிலும் எனக்குச் சுதந்திரம் அளித்த அப்பா நமது காதலில் மட்டும்......" அவளால் வாக்கியத்தை முடிக்கமுடியவில்லை. வெட்டுக்காயத்தில் இருந்து பாய்வது போல மடைதிறந்து பெருகிய கண்ணீர் வெள்ளம் அந்த வாக்கியத்தை முடித்து வைத்தது.

"மீனு! கவலைப்படாதே. காதலும் கண்ணீரும் இரட்டைக் குழந்தைகள் போன்றவை. பெரும்பாலும் இந்த இரண்டும் ஏககாலத்தில் வாழ்வதில்லை. ஒன்றில் காதல் செத்துக் கண்ணீர் வாழும் அல்லது கண்ணீர் செத்துக் காதல் வாழும். ஆனுல் நாங்கள் அப்படியென்ன துரதிர்ஷ்டசாலிகளோ? எங்களைப் பொறுத்தவரையில் இரண்டும் குற்றுயிரும் குறையுயிருமாகத் துடிக்கின்றன" என்று அவளுடைய பட்டுப்போன்ற கன்னத்தில் வழிந்தோடிய கண்ணீர் மணிகளைத் துடைத்துவிட்டான்.

"சந்திரன்! என்ன நெருக்கடி நேர்ந்தபோதிலும் இந்த அபலையை மறந்துவிடமாட்டீர்களே"

"முடியாது மீனு முடியாது. என்னுல் உன்னை மறக்க முடியாது. உன்னை மறப்பதானுல் என்னை மறக்க வேண்டும். அந்த நிலை வந்தால் எந்த நினைவுமே இருக்காதல்லவா?"

"அப்படிச் சொல்லாதீர்கள். என்னுல் பொறுக்க முடியாது" என்று மீனு அவனுடைய அகன்ற மார்பில் சாய்ந்தாள். சந்திரன் அவளுடைய கார்மேகக் கூந்தலைக் கோதிவிட்டுக் கொண்டே சொன்னுன்.

"உண்மை அன்புக்கு என்றைக்குமே அழிவில்லை என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். எமக்கு விடிவு காலம் வெகுதூரத்தில் இல்லை. எங்கே ஒரு முறை சிரி பார்க்கலாம்."

பனிப்படலத்தின் மத்தியில் பகலவன் தோன்றிப் புன்முறுவல் பூத்ததுபோல கண்ணீருக்கு மத்தியில் அவள் சிரித்தாள். அவளை அப்படியே வாரி அணைத்துக் கொள்ள வேண்டும் போலத் தோன்றியது சந்திரனுக்கு.

அந்தக் கடைசித் தினத்தில் நிகழ்ந்த அந்தக் கடைசிச் சந்திப்பை அவன் தனது இதயத்

திரையில் அழுத்தமாக எழுதி வைத்திருந்தான்.

இன்று—?

எல்லாம் மங்கி மங்கி மறைவது போல ஒரு பிரமை தட்டியது சந்திரனுக்கு.

* * *

'படக் படக்' என்று சந்திரனுடைய அறைக்கதவு இடிக்கப்பட்டது. ஆடாது அசையாது தட்டப்பட்ட கதவையே பார்த்துக் கொண்டு பேசாதிருந்தான் சந்திரன். கதவு மீண்டும் இடிக்கப்பட்டது. மீண்டும் மௌனம்!

"சந்திரன், கதவைத் திறவுங்கள்!" என்ற குரல் கேட்டது. அந்தக் குரல் முன்பு பழக்கப்பட்ட குரலாக இல்லை. எழுந்து கண்களைத் துடைத்துக் கொண்டு போய்க் கதவைத் திறந்தான்.

சுமார் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு வாலிபன் நின்று கொண்டிருந்தான். சந்திரன் அவனை வியப்புடன் பார்த்து, "நீங்கள் யார்?" என்றான்.

"நான்தான் மீனாவுக்குக் கணவனாகப் போகிறவன்" என்றான் அவன் நிதானமாக.

சந்திரன் கல்லாய் நின்றான்.

"எனக்கு உங்கள் விஷயம் முழுவதும் இப்பொழுது மணப்பந்தலில்தான் தெரியவந்தது. ஏற்கனவே விஷயம் தெரிந்திருந்தால் உங்களுக்குத் துரோகம் செய்யவே முற்பட்டிருக்கமாட்டேன்" என்றான்.

"எல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியவந்தது?"

"சுகுணா சொன்னாள். அவள் எனக்கு தூரத்து உறவு. காலையில் இரண்டாவது ரயிலில்தான் இங்கு வந்தாள்"

"சுகுணா வந்தாளா?"

"ஆமாம் நேற்று ரயில் நகரும் பொழுது எங்கள் திருமணஅழைப்பைக் கசக்கி எறிந்தீர்களாமே அதைப் பார்த்துவிட்டு தந்தையையும் இழுத்துக் கொண்டு அடுத்த ரயிலிலேயே புறப்பட்டு விட்டாள். சந்திரன்! திருமணத்துக்கு எல்லா ஆயத்தமும் முடிந்த கடைசி நேரத்தில் நான் குழப்பி விட்டதால், மானத்தைக் காக்க உங்களுக்கே மீனாவை மணம் செய்துதர அவளுடைய தகப்பனார் சம்மதித்துவிட்டார். உடன் புறப்படுங்கள்."

"உங்களுககு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன்" என்று சந்திரன் உணர்ச்சிவசப்பட்டுக் கூறியதைக் கேட்க அங்கு அவன் இல்லை. அவன் போயேபோய் விட்டான். அவனுக்குப்பதிலாக சுகுணா நின்றிருந்தாள்.

சுகுணா சந்திரனுடைய கால்களில் விழுந்து "நடந்தவற்றை மறந்து என்னை மன்னித்து விடுங்கள் அண்ணா" என்று கலங்கினாள்.

"சே! எழுந்திரு. இதென்ன அசட்டுப் பெண்ணாட்டம் அழுகை" என்று சுகுணாவைத் தேற்றினான் சந்திரன்.

"என்னங்காணும் டிங்கான்! கல்யாணம் என்றால் செக்கிழுக்கிற வேலை என்று நினைத்தீரோ. கெதியாய்ப் புறப்படுங்காணும்" என்று கூறிக்கொண்டே அங்கு வந்தார் சுகுணாவின் தந்தை.

சந்திரன் பொற்கயிற்றை எடுத்து மீனாவின் கழுத்தருகில் கொண்டு சென்ற சமயம், மீனா கடைக்கண்ணால் சந்திரனை அள்ளிப் பருகினாள். அவளுடைய இதழ் ஓரத்தை ஒரு இளநகை தழுவத் துடித்தது. அவளுடைய பட்டுப்போன்ற கன்னம் குங்குமமாய்ச் சிவந்துபோன அழகைப் பார்க்கவேண்டுமே! (முற்றும்)

"நான் எவ்வளவோ எழுதியிருக்கிறேன். ஆனல் பணம் என்று கண்டது கலைமகளில் பிரசுரமான "அனுலா" என்ற சிறுகதைக்குத் தான். மொழிபெயர்ப்பு நூல் ஒன்றுக்கும் ரூபாய் முந்நூறு பெற்ற துண்டு. மற்றவையெல்லாம் தமிழ்த்தாய் மேல் கொண்ட ஆசை யினல் எழுதப்பட்டவை..."

# எழுத்துலகில் நான்

— இலங்கையர்கோன் —

என்னுடைய இளம் வயதிலே எத்தனையோ கனவுகள் கண்டேன். அவற்றுள், சிறு கதைகள் எழுத வேண்டும் என்பதும் ஒன்று....

கனவுகள் காண்பது எல்லாம் உண்மை. யாரும் கனவுகாண லாம். பதினெட்டு வயது படைத்த வாலிபனும் கனவு காணலாம். நூறு வயது வந்த கிழவனும் கனவு காணலாம். ... ஆனல், என் கனவு பலிதம் ஆகிவிட்டது என்றுதான் எனக்குச் சொல்லத் தோன்றுகிறது.

நான் முதல் முதல் எழுதத் தொடங்கும்பொழுது எனக்கு வயது பதினெட்டு. என்னுடைய முதல் கதை "மரியா மதலேனு" என்பது.

அந்த இளம் நாட்களிலே எத்த னையோ கனவுகள் கண்டேன். என் கனவுகளோடே என் வாழ்க் கை ஐக்கியமானது என்று சொன் ஞல் கூட அது குறைத்துச் சொல் வதாகவே என் மனதில் படுகின் றது.

"மரியாமதலேனு" கலைமகள் பத் திரிகையில் பிரசுரமானது. அந்த நாட்களில் எனக்கு, பணத்தைப் பற்றிக் கவலை இருக்கவில்லை. எப் படியும் என்னுடைய கதை தான் பிரசுரமாக வேண்டும், என்று ஓர் ஆசை. அந்த ஆசை நிறை வேறியது!

வாழ்விலே சிலர் பண வேண் டும் என்று பணத் தேவதையைத் தேடி அலைவார்கள். வேறும் சிலர் புகழ் வேண்டும் என்று புகழ்த் தேவதையைத் தேடி அலைவார் கள். இன்னும் சிலர் கலைமகளின் கடாட்சத்தை நாடி அலைவார்கள். வெள்ளைக்கலை உடுத்த அந்தத் தாய்; அவளின் கடாட்சம், அல் லது கருணை எல்லோருக்கும் இலகுவில் கிட்டி விடுவதில்லை. எனக்கு, அந்த வெள்ளைக் கலை உடுத்த தாயின் கடாட்சம் பதி னெட்டு வயதிலே கிட்டி விட் டது......

நான் திருமகளின் கடாட் சத்தை என்றும் நாடியதில்லை. கலைமகளின் கடாட்சம் பெற்றவ

களுக்கு திருமகளின் கடாட்சம் ஒரு துச்சம்!

என்னுடைய இளம் வயதிலேயே எனக்கு ஆங்கில இலக்கியத்திலே ஆசை ஏற்பட்டது. படித்தேன் பல நூல்கள் எல்லாம். அதன் பிறகு தமிழ்த் தாய் என்னைக் கவர்ந்து கொண்டாள். தமிழில் உள்ள அத்தனை நூல்களையும் படித்துத்தான் தீர்த்தேன். அதற்கிடையில் சிறிது சமஸ்கிருதமும், லத்தீனும் கற்றுக் கொண்டேன்.

இடையில் எனக்கு மனம்வந்த பொழுதெல்லாம் சிறுகதைகள் எழுதினேன். இந்தியப் பத்திரிகைகளும் இலங்கைப் பத்திரிகைகளும் அவைகளைப் பிரசுரித்தன. இதற்கிடையில் ஆங்கிலத்திலும் சிறுகதைகள் எழுத வேண்டும் என்று எனக்கு ஒரு ஆசை வந்தது. அதன்படி எழுதினேன். பல பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன. ஆங்கில மோகம் தீர்ந்தவுடன், தமிழ் மோகம் மறுபடி என்னை ஆட்கொண்டது.

ஆனால் இம்முறை நான் எழுதியவை சிறுகதைகள், அல்ல நாவல்கள் அல்ல! நான் நாடக மடந்தைக்கு அடிமை ஆகிவிட்டேன். முதலில் றேடியோ நாடகங்கள் என்று ஆரம்பித்து, கிட்டத்தட்ட இருநூறு றேடியோ நாடகங்கள் எழுதிய பிறகு, மேடை நாடகங்களின் மேல் என் ஆசை விழுந்தது.

எழுதினேன் நாடகங்கள்—நாட்டுத் தமிழிலும் எழுதினேன்—நல்ல தமிழிலும் எழுதினேன். பலர் என்னைத் தூற்றினார்கள்! அறிந்த சிலர் என்னைப் போற்றினார்கள்.

அவைகளுக்காக, எனக்குக் கைவந்த ஒரு கலையை விட்டு விடுவதா, என்ன? என்னுடைய நாடகங்கள் சில மேடை மேல் வெற்றிகரமாக நடிக்கப்பட்டன. சில புத்தக வடிவில் வெளியிடப்பட்டன.

ஆனால் இலங்கையில் ஒருவன் எழுதிச் சீவிக்கலாம் என்று நினைத்தால் அது போன்ற பிழை வேறு ஒன்றும் இருக்க முடியாது. தமிழ் எழுத்து பரம்பரையே பிச்சைக்காரப் பரம்பரைதான். அதில் எங்கள் அரும் தமிழ் புலவர்கள் எங்கள் மொழிக்கே வளப்பம் தந்த பெரும் புலவர்களே அன்றைய அரசர்களிடம் பிச்சைஎடுத்தார்கள். இன்றைய எழுத்தாளர்கள் எழுத்தை நம்பி உயிர் வாழ முடியாது. கு. ப. ராஜகோபாலன்போல் பட்டினியால் செத்து மடிய வேண்டியதுதான்.

தமிழை இலங்கையிலே, எழுதத் துணிபவன் ஒன்றில் பெரும் செல்வனாக இருக்க வேண்டும், அல்லது வேறு வருவாய் உள்ளவனாக இருக்க வேண்டும். இப்பொழுது உள்ள நிலைமையில் மற்றவர்கள் எழுத்து உலகில் புகுந்தால் அதோகதிதான்.

நான் எவ்வளவோ எழுதியிருக்கிறேன். ஆனல் பணம் என்று கண்டது கலைமகளில் பிரசுரமான "அநுலா" என்ற ஒரு சிறு கதைக்குத்தான். என்னுடைய மொழிபெயர்ப்பு நூல் ஒன்றுக்கும் ரூபா முந்நூறு பெற்றதுண்டு. மற்றவையெல்லாம் தமிழ்த் தாய் மேல் கொண்ட ஆசையினல் எழுதப்பட்டவை.

இந்த, அனுபவங்கள் என்ற தொடரில் எனக்கு எழுதுவதற்கு விருப்பமேயில்லை. ஆயினும், வளரும் பத்திரிகையான "கலைச் செல்வி" கேட்டுக் கொண்டபடியால், இவ்வளவும் எழுதினேன்.

நான் தமிழ் அணங்கின் மேல் இளவயது முதல் கொண்ட ஆசையாலோ என்னவோ, யாழ்ப்பாணத்திலே ஒரு நல்ல பத்திரிகை நடக்க வேண்டும் என்பது என்னுடைய பல நாளைய ஆவல். அந்த ஆவல் ஒரு அளவு "கலைச்செல்வி"யினல் பூர்த்தி செய்யப்படுகிறது போலும்! அது எனக்கு நிறைந்த மகிழ்ச்சி.

செங்குந்த இந்துக் கல்லூரி ஆசிரியை 'மதி' பி. ஏ. பட்டதாரி இவரது முதல் சிறுகதை 'சந்தேகம்'.

# சந்தேகம்!

— மதி —

அதோ ஒரு அழகான கிராமம். சுமார் ஐம்பது குடிகளுக்குக் குறையாமல் வசித்து வருகின்றார்கள். நடுவே ஆடம்பரமில்லாத ஆனல் எழில் நிறைந்த ஒரு சிறு கல்வீடு. சுற்றிலும் ஒழுங்கான வேலி. முன்றிலின் இரு மருங்கிலும் வர்ணப் பூக்கள் பூத்துக் குலுங்கும் பூங்கா! இத்தகைய சூழ்நிலையில் தாயுடன் வாழ்ந்து வருகின்றாள். வசந்தா மக்களின் அன்பையும் ஆதரவையும் நிறையப் பெற்று அவர்களிடையே உண்மைச்சேவை புரிந்து வாழ்ந்து வருகிறாள். கிராமத்தைச் செழிக்கச் செய்ய விஞ்ஞான முறைகளைப் போதித்து, ஓய்வான வேளைகளில் குழந்தைகட்குப் பாடமுஞ் சொல்லிக் கொடுப்பாள். அன்று மாலைப் போதனைக்கு ஔவையார் அருளிச் செய்த 'நல்வழி'யை எடுத்தாள்.

"ஆவாரை யாரே அழிப்பரது வன்றிச் சாவாரை யாரே தவிர்ப்பர்."— என்ற இந்த இரண்டடிகள் விசுவரூபம் எடுத்து அவள் வாழ்வையே எடுத்துக் கூறும் வரலாறுக விரிந்தன......!

வசந்தா பிறந்த சந்தோஷச் செய்தியைக் கேட்டு அவளைப் பார்க்க ஆவலுடன் ஓடோடியும் வந்த அவளுடைய தகப்பன் கொடிய ரயில் விபத்தில் அகப்பட்டு மாண்டார். அவளுடைய ஒரே அண்ணனும், தங்கை தளர் நடை போட்டுத் தடுக்கி விழும் போது தூக்கவும், பரிவுடன் பாதுகாக்கவும் இருந்தானேயன்றி அன்பின் பிரதிபலிப்பான அவளுடைய ஒத்தாசைகளைப் பெறவாழவில்லை! துன்ப சாகரத்தில் மூழ்கிய தாயும் மகளும் ஆண் துணையின்றித் தவித்தனர். துன்பத்தைத் துடைக்க முன்வந்தான் சண்முகனின்-அதுதான் வசந்தாவின் அண்ண பெயர்-உயிர்த்தோழன் அருண். பெற்றோரை இழந்தவன், பிரம்மச்சாரியாக இருந்த மாமனுடன் வாழ்ந்து வந்தான். இவர்களுடைய அன்பையும் ஆதரவையும் மனமுவந்தேற்றான். தனியனை அவனுக்கும் அன்பு மருந்து தானே! எனவே அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவனைப் போன்று ஒன்றிப் பழகினன்.

காலம் என்னும் கடலிலிருந்து நாட்கள் என்னும் அலைகள் தோன்றித் தோன்றி மறைந்தன. வசந்தா-அருண் நட்பும் பிறைமதி போன்று வளர்ந்தது. பருவம் தன்னுடைய பகட்டைப் பகிரங்கப்படுத்தும் காலத்தை வசந்தா

எட்டிப்பிடித்தாள். அழகு ஒளி விடும் அவளின் அங்க அசைவுக ளிலும், அன்பைச் சொரியும் அமுத மொழிகளிலும் அனைவரும் மயங்கினர்கள். அருண் மட்டும் விதிவிலக்கா?

பள்ளிப்படிப்பு முடியும் சமயம் நெருங்கியது. சிறுவர்களாக இருக்கும் பொழுதே கவலையை அனுப வித்தவர்களுக்கு, சேவை செய்ய வேண்டும் என்ற ஆவல் மிகுந் திருந்தது. அவன் டாக்டராகவும் அவள் நர்ஸாகவும் படித்து, ஒரு வைத்தியசாலை அமைத்துச்சேவை செய்வது என்ற முடிவுக்கு வந்த னர்.

கலாசாலைக்குச் செல்ல வேண் டிய நாள் வந்தது. விட்டுப் பிரிய மனமின்றி விடைகொடுத்த னுப்பினள் தாய்!

கலாசாலைகள் ஒரே நகரிலேயே இருந்தன. அடிக்கடி இருவரும் சந்திக்கவும் செய்தனர். அது போதாதென்று அவர்களுக் கிடையே பறந்த அஞ்சல்கள்? கற்கண்டுச் சுரங்கமாய், கன்னித் தமிழின் வண்ண நடையழகாய் காதல் மகா காவியத்தின் களிப் பூட்டும் காட்சிகளாய் அவர்கள் தீட்டிய கடிதங்கள்......! நாட்கள் பறந்து சென்று விடுமுறையை அழைத்து வந்தன.

இவ்வளவு நாட்களும் கவனிக் காத ஆற்றங்கரை இப்பொழுது இன்றியமையாததாக இருந்தது. கதிரவனின் நெருப்புக் கண்க ளுக்கு முன், பட்சி ஜாலங்களின் பாட்டுக்களுக்கிடையில் காதலர் கள் தங்கள் காதலை உறுதிப் படுத்தினர். ஆற்று நீரின் சலசலப் பில் பூத்துக் குலுங்கும் செடிகள் அசைந்தாடுவது வண்ண மகளிர் பூத்தட்டேந்தி நடனமாடி மகிழ் வூட்டுவது போன்றிருந்தது! அதைக் கண்டு மீன் குஞ்சுகள் துள்ளிப் பாய்ந்து குதூகலித்தன! விண்ணிலே தாரகைகள் கண் சிமிட்டும் போதுதான் தம் கொண் டாட்டத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து விட்டு வீடு திரும்ப எண்ணுவார்கள்.

*　　*　　*

மூன்று வருடங்கள் முடிந்தன. வசந்தாவின் படிப்பும் முடிந்தது. உள்ளூரிலேயே உத்தியோகமும் கிடைத்தது. அங்குள்ள வைத்திய சாலையின் முக்கிய நர்ஸாக பதவி யேற்றவள் அந்தச் சீரிய பணி யைச் சினக்காது செய்தாள். சிரித்த முகத்துடன் அன்பர்கப் பழகும் அவளை நோயாளிகள் மாத்திரமல்ல, எல்லோருமே விரும்பினர்கள். அவளின் சாந்த சொரூபத்தையும், கனிவுக் கண் பார்வையையும்பார்த்தாலே அவர் களுக்குப் பாதி வருத்தம் மாறி விடும்!

காணக்காத்திருந்த அருண் விடு முறையின் போது ஆசையோடு வந்தான். பிரிவு என்னும் பேய் தன்னைப் படுத்திய பாட்டைப் பல வாருக எடுத்துச் சொன்னன். அன்று மாலை ஆற்றங்கரையை நோக்கிப் போனர்கள். வழியில் அவள் வேலை பார்க்கும் ஆஸ்பத்

திரியின் தலைவரான டாக்டர் இராகவன் அவர்களைக் கண்டார். அவள் அன்று ஆஸ்பத்திரிக்கு வராத காரணத்தைப் புரிந்து கொண்டார். ஒரு விஷமப் புன்ன கையுடன் ஷேமம் விசாரித்து விட்டு விலகினர்.

டாக்டர் இராகவனின் நயவஞ் சகக் குணத்தை நன்கறிந்த வசந்தா, அவரை அருணுக்கு அறிமுகப்படுத்தவில்லை, அத்து டன் அருண் அவரைப் பற்றி விசாரிக்க முயன்றபோதும் அவள் மழுப்பிவிட்டு வேறு திசையில் பேச்சைத் திருப்பிவிட்டாள். ஆனல் அருண் நினைத்தது......?

ஆண் வர்க்கம் பொருமை பிடித்த பொல்லாத வர்க்கம். தமக்குப் பிடித்தவளுடன் மற்ற வர்களைப் பேசவே விடாது! அல் லாவிட்டால் சாதாரணமாகச் சந் தித்த டாக்டர் மீது பொருமை கொள்ளுவான அருண்? அவனை யறியாமல் அன்று அவனுடைய வெள்ளை மனதில் ஒரு சிறுகறுத்த அணுப் புகுந்தது. என்ருலும் அவர்களின் காதல் கோட்டை அசையாமலே இருந்தது. நாட் கள் பறந்தன. கடைசி விடுமுறை யும் கடுகி வந்துவிட்டது. இன் னும் மூன்றே மூன்று மாதங்கள். அவர்கள் என்றுமே ஒன்ருக இருக்கப் போகின்ருர்கள்!

அன்ருெரு நாள் வந்தவன் அவளை எதிர்பார்த்துக் கொண்டு அவளுடைய அறையில் இருந் தான். மேசை மேல் இருந்த ஒரு நாவலை எடுத்துப் புரட்டினன். உள்ளே "டாக்டர் இராகவன் என்ற பெயர் தென்பட்டது. கதைச் சுருக்கத்தில் கண்ணேட் டம் விட்டவன் ஸ்தம்பித்தான். டாக்டர் ஒருவர் நர்ஸ் ஒருத்தி யைக் காதலிக்கிருர் கதையில்! அதைப்போன்றுதான் வசந்தா வும் தன்னுடைய வாழ்க்கையை அமைக்க விரும்புகின்ருளா? என்ற கேள்வி மனதில் உதித்தது. பழைய சம்பவங்களால் வலுத் தது. உடனே சொல்லிக் கொள் ளாமல் நடையைக்கட்டினன். முன் னெரு நாள் வழியில் டாக்டர் சந்தித்ததையும், பின் ஒரு நாள் அவருக்கு அளிக்கப்பட்ட விருந் தையும் இன்னும் பல கதைகளை யும் தன்னுடைய சந்தேகத்துடன் தொடர்பு படுத்தினன்.

போராட்டம் என்னும் புயலால் மனம் என்னும் கடல் கொந்த ளித்தது. வசந்தா இப்படிப்பட்ட வளா? இவ்வளவு நாட்களும் நடந்துகொண்டதெல்லாம் வெறும் நாடகந்தானு? மனம் மாறியது மட்டுமல்ல அதை இத்தனை நாசூக் காக தெரிவிக்கும் மூளையையும் எடுத்தாளே வஞ்சகி! என்று எண்ணிக்குமுறுவான்.

மறுகணம் அவனுக்கே இயற்கை யான நல்ல சுபாவம் தலையெடுக் கும். தன்னையே நோவான்! விடிவே இல்லையா என்று ஏங்கு வான்? சோர்வுறுவான்! சந் தோஷ வாழ்வு என்பது தன் மட்டில் வாய்க்கெட்டாத கனி யாக முடிந்து விட்டதே என்று கவலைப்படுவான். அனதையாகிய எனக்கு மட்டும் உலக நியதிக்கு மாருகச் சந்தோஷம் கிட்டுமா?

யாரைத்தான் நோவது? அவனை யாவது வாழவிடவேண்டும்! வாழ வழிசெய்ய வேண்டும்! எங்ஙனம்? மனமொப்புமா? அவள் ஒத்து ழைக்க வேண்டாமா? அவள் மட்டுமல்ல, இந்த உலகம் முழுவ துமே ஒன்றுதிரண்டு தன்னை வஞ் சிக்கின்றது என்ற எண்ணம் ஏற் பட்டது.

நெஞ்சு இருக்கும் வரைக்கும் அவளை நினைக்கத்தான் வேண் டும்! அவள் நினைவு இருக்கும் வரைக்கும் அவன் உருகிஉருகிச் சாகத்தான் வேண்டும்!! அப்படி யென்ருல் அவன் வாழவே முடி யாதா?

நெடுநேரம் சிந்தித்து ஒரு முடி வுக்கு வந்தான். இனி, படிப்பும் வேண்டாம் ஒரு மண்ணுங்கட்டி யும் வேண்டாம். எப்படியாவது வாழ்ந்து, கிடைத்த முதல் சந் தர்ப்பத்தில் உலகில் இருந்து விடுதலை பெறுவது! நம் நாட் டுப் படையில் சேர்ந்தால் சாவு என்னும் பரிசு சடுதியில் கிடைக் குமே! ஆமாம்! அவன் பட்டாளத் திற் சேர்ந்து நாட்டுக்காக உயிர் கொடுக்கத் தீர்மானித்துவிட் டான்!

*   *   *

ஆஸ்பத்திரியிலிருந்து வந்த வசந்தா அருணிற்காகக் காத்தி ருந்தாள். அவன் வரவில்லை; வந்து போன அடையாளமுமில்லை. அவளுடைய நெஞ்சு 'திக் திக்' என்றது, எதையோவெல்லாம் யோசித்தாள்.

"அவருக்கு உடம்புக்குத்தான் ஏதோ வந்துவிட்டதோ? அல்லது வரும் வழியில் ......? ஐயோ வேண்டாமே இந்த எண்ணங்கள். விடியவாவது கட்டாயம் வரு வார்" என்று தேறிச் சற்றுக் கண்ணயர்ந்தாள்.

மறுநாளும் காத்துக் களைத்த பின் அவனை நாடிச் சென்ருள். அங்கே அவள் கண்ட காட்சி! அவன் பிரயாணத்திற்கு ஆயத் தம் செய்து கொண்டிருந்தான்! அவனுடைய முகம் இத்தனை விகார மடையுமென்று அவள் கனவிலும் எண்ணியதில்லையே! எத்தனையோ முறை கெஞ்சிக் கேட்டபின்தான், பரீட்சைக்குத் தயார் பண்ண வேண்டும் ஆத லால் போகிறேன்" என்ற இரத் தினச் சுருக்கமான விடை கிடைத் தது. "எனக்கு ஏன் சொல்ல வில்லை? இதை முதலிலேயே சொல் லியிருக்கக்கூடாதா அருண்?" என்று குழைந்தாள்.

"அவசியமில்லை! உனக்கு அக் கறை இருக்கமாட்டாது என்று விட்டுவிட்டேன்!" இந்தச் சுடு சரம் அவள் மனதைச் சுக்கு நூருக்கியது." "என்ன அருண்? என் மேல் என்ன கோபம்?" கோபமில்லையே? யார் கோப மென்றது...? உம் நேரம் போகி றது நான் கிளம்ப வேண்டாமா?" என்று சொல்லிக் கொண்டு அறை யினின்றும் வெளியேறினன்.

அவளும் தாயிடம் சொல்லி விட்டு ரெயிலடிக்குப் போகலாம் என்று போய்விட்டாள். அங்கே யாவது அவன் சாந்தமடைந்து ஆறுதலாக இரண்டு வார்த்தை

பேசுவான் என்று எதிர் பார்த்தாள்? வெந்த புண்ணில் வேல் தான் பாய்ந்தது.

அவன் போய் ஒரு வாரமாகியும் கடிதம் ஒன்றும் வரவில்லை. கதிகலங்கினாள்! அவள் எழுதிய கடிதமும், 'அந்த மாணவன் கல்லூரியையே விட்டுவிட்டான்' என்ற குறிப்புடன் திருப்பப்பட்டது. பதறிவிட்டாள்! நான் என்ன செய்தேன்? ஏன் இந்த பேரிடி? அவர் எங்கே சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டார்? என்ன தான் அப்படித் தவறிழைத்தேன்? கொஞ்சம் மனதைத் திறந்து தான் சொல்லியிருக்கலாமே! தப்ப ஒருதுரும்புங் கிடையாது நடுக்கடலிலல்லவா மூழ்கிவிட்டேன்! காரணமும் தெரியாது; அவரும் எங்கே என்று தெரியாது இனி ஏன் வாழ்க்கை? காரணங் கேட்கக் கூட அருகதையற்றவளாகி விட்டேன்!

எண்ணி எண்ணி கலங்கினாள். அவர் தான் முடிவைக் கூறாமல் கூறிவிட்டார். வாழ்ந்து தான் என்ன பயன்? யாருக்காக வாழ்வது? உயிரை மாய்க்கலாம்...! ஆனால் பின்பு என்னைப் பற்றி நிலவும் பழிச் சொற்கள்? இகழ்ச்சிகள்? பெற்று வளர்த்த கஷ்டத்துடன் இந்த மானக்கேட்டையுமா என் தாய் அனுபவிக்க வேண்டும்? வேண்டாம்! இந்த ஊரை விட்டு வேற்றிடம் போய், அம்மா! மறையும் பொழுது நானும் தொடரலாம்! ஆம்! அதுதான் என் கடமை!"

இந்த முடிவிற்கு வந்த வசந்தா ராவலேயினின்றும் நீங்கி இந்தப் புதிய கிராமத்திற்கு வந்தாள் அங்குள்ளோரின் முடிசூடா ராணியாக விளங்கிய அவள், ஒரு தடவை, கிராமத்துச் சிறுவர்களை அழைத்துக்கொண்டு ரயிலடிக்குச் சென்றாள். அவர்கள் நிலயத்திற்குள் நுழைந்தபோது புகைவண்டி ஒன்று வந்து நின்றது; முன் பின் புகைவண்டியைப்பார்த்திராத அந்தச் சிறுவர்களைஅதனருகேஅழைத்துச் சென்று காட்டினாள். வேடிக்கையாக அவர்களுடன் சென்ற வசந்தாவின் பார்வை, ஜன்னல் கதவொன்றில் தலையை வைத்துச் சிந்தனையை எங்கோ விட்டிருந்த ஓர் உருவத்தின் மேல் விழுந்தது. கண்களை வெட்டாமல் பார்த்தாள். அந்த உருவம் அருண்.............. அருணேதான்...!

"அருண்...........அருண்!" வசந்தா அலறினாள். இராணுவ உடையுடனிருந்த அருண் விறைப்புடன் திரும்பி வெறுப்புடன் பார்த்தான் அவளை. அதைக் கவனிக்காத வசந்தா "ஏன் இந்தக் கோலம்? எங்கே செல்கிறீர்கள் அருண்!" என்றாள் படபடப்புடன்.

"ஏன், உன் இராகவன் வரவில்லையோ!" அருணின் வார்த்தை சூடாகவே இருந்தது.

திகைத்தாள் வசந்தா. "என்ன பேசுகிறீர்கள், அருண்?" "உன் அருமைக் கணவனைப் பற்றித் தான் கேட்கின்றேன்!"

வசந்தாவுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. தாபம் கோபமாக

மாறியது. அவமானமும் ஆத்திரமும் அந்தச் சூழ்நிலையையே மறக்கச் செய்தன. குமுறும் நெஞ்சிலிருந்து குதித்தோடின வார்த்தைகள். "ம்... கணவனைப் பற்றிக் கேட்க நீங்கள் யார்? உங்களுக்கு அந்த ஸ்தானம் பிடிக்கவில்லை, போய்விட்டீர்கள்! - என்னைப் பற்றிய சிந்தனை சிறிதாவது இருந்ததா? சொல்லுங்கள் அருண், சொல்லுங்கள்! காலம் காலமாகக் கட்டியெழுப்பினோமே ஒரு காதற் கோட்டையை! கடிதம் கடிதமாகக் காதல் காவியங்கள் எழுதினோமே! எல்லாம் கனவாகி விட்டனவே அருண்!" ஆவேசத்துடன் பேசத் தொடங்கியவள் அளவிற்கு மீறிய துக்கத்தினால் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

"டாக்டர் ராகவனைப் பற்றிச் சந்தேகம் இருந்திருந்தால் என்னிடமே கேட்டிருக்கலாமே! உள்ளத்தோடு உள்ளத்தைக் கட்டி உயிரோடு உயிரைக் கலந்து ஒன்றாக வாழ்ந்த எம்மிடையே ஏன் அருண், இந்தச் சந்தேகப் புழுவை வளர விட்டீர்கள்? ஏன் பேசாமலிருக்கின்றீர்கள்? வாயைத் திறந்து ஏதாவது சொல்லுங்களேன்" இரும்பாக நின்ற அருணின் உடலைப் பிடித்துக் குலுக்கியபடி கேட்டாள் வசந்தா.

அருணின் கண்களிலிருந்தும் நீர் வழிந்தது. வசந்தா குற்றமற்றவள் என்பதை உணர்ந்தான்.

"வசந்தா! உன்னை அநியாயமாக வதைத்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு" வார்த்தைகள் திக்கித் திக்கி வெளிவந்தன.

அவனுடைய பரிதாபமான முகத்தைப் பார்க்க அவளுக்கு மேலும் துக்கம் பொங்கியது. "எல்லாவற்றையும் மறந்து விடுவோம். இனி, புது வாழ்வு வாழ்வோம். வாருங்கள்" என்று சொல்லிக்கொண்டே அருணின் பாதங்களில் விழுந்தாள் வசந்தா.

புயலிலகப்பட்ட பூங்கொடி போன்று துவண்டு விழுந்த வசந்தாவைத் தூக்கி மார்புடன் அணைக்கும் சமயம்----

புகைவண்டி அவலக் குரலெழுப்பி விட்டு அசையத் தொடங்கியது. இரண்டு இரும்புக் கரங்கள் அருணைப் பின்னுக்கிழுத்தன.

"இராணுவ விதிகளுக்கெதிராக நடக்கின்றாயே!...... ம் ...... வண்டியிலேறு சீக்கிரம்"... என்று கர்ச்சித்தான் இராணுவத் தலைவன். அருண் பதறினான். வசந்தா பதறினாள்.

ஓடிக்கொண்டிருந்த ரயிலின் கதவைத் திறந்து அருணை உள்ளே தள்ளினான் தலைவன்.

"ஐயோ! அருண்...... அருண் ............! வசந்தாவின் நெஞ்சைப் பிளந்துகொண்டு வெளி வந்தது இக் குரல்.

"வசந்தா!............ வசந்தா" ஓடும் ரயிலிலிருந்து ஒரேயடியாகக் கத்தினான் அருண். ரயில், ஒவ்வொரு கணமும் அவர்களைப் பிரித்துக் கொண்டே சென்றது.

* * *

"ஏன் டீச்சர் அழுகின்றீர்கள்?" என்று கேட்டாள் ஒரு சிறுமி. தன் நினைவிற்கு வந்தாள் வசந்தா. சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்தபடி

"வருந்தியழைத்தாலும் வாராத
வாரா பொருந்துவன
போமினென்றாற் போகா"

என்ற பாடலைப் படிப்பிக்கத் தொடங்கினாள்.

நாடக விமர்சனம்:

# "வாழும் இனம்"

இலங்கையில் பல்கலைக் கழகத் தமிழ்ச்சங்க (கொழும்பு) மாண வர்கள் பல ஆண்டுகளாக தமி ழில் நல்ல சமூக நாடகங்களை ஆண்டுதோறும் அரங்கேற்றி வரு கிறார்கள். இந்த ஆண்டு வகுப் புக் கலவரங்கள், அதைத் தொ டர்ந்து அவசரகாலச் சட்டப் பிர கடனம் முதலிய இடையூறுகள் இருந்தும், இவற்றைப் பொருட் படுத்தாமல் **"வாழும் இனம்"** என்ற சமூக நாடகத்தை சென்ற 25-11-58 அன்று கொழும்பு கிங் ஜோர்ஜ் மண்டபத்தில் நல்ல முறையில் அரங்கேற்றினார்கள்.

திருவாளர் கணபதிப்பிள்ளை பாணபுரியின் நகர பிதா மட்டு மல்ல, அங்கேயுள்ள "கெமிக்கல்" பாக்டரியில் ஒரு பாகஸ்தர்கூட. பாக்டரியிலுள்ள அசுத்த நீர் நக ரெங்கும் தொற்றுநோயைப் பரப் புகிறது. நகர சுகாதார அதி காரி இதை மேலிடத்துக்கு அறி விக்கிறார். குபேரப்பணம் தரும் தொழிற்சாலையை மூட நேர்ந்தால் மேயரின் கோபுரவாழ்வு நீடிப்ப தெப்படி ? மேயர், சுகாதார அதி காரி மீது பாய்கிறார்! சுகாதார அதிகாரிக்கு இடமாற்றம்-சுகா தார மந்திரியின் திடீர் உத்தரவு! மேயர் வென்றுவிட்டார்! பாக்ட ரியின் வாழ்வு நீடிக்கப்பட்டுவிட் டது! புதிய சுகாதார அதிகாரி மேயரின் கைப்பொம்மை, மேய ரைப் பதவிக்கு அனுப்பிய நாதி யற்ற குடும்பங்கள் பயங்கரத் தொற்று நோயில் நெளிந்து, துடித்து மடிகிறார்கள். யாருக் குமே அதுபற்றிக் கவலையில்லை ஆனாலும் மேயருக்கு ஒரு கவலை– அந்த மக்களுக்காக அல்ல-மந் திரியாருக்காக! பணம் காய்க்கும் "பாக்டரி"யில் ஒரு பங்கு மந்திரி யாருக்குத் தருவதாக, மேயர் கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடியாதபடி ஏனைய பாகஸ்தர் கள் முட்டுக்கட்டை போடுகிறார் கள். ஆயிரம் ஆயிரம் மக்களுக்கு அளித்த வாக்குறுதியைப் பற்றி அணுவளவாவது அக்கறை காட் டாத மேயர், தனி ஒருவருக் களித்த வாக்கை நிறைவேற்ற முடியாததால், "பாக்டரி"யில் தமக்கிருக்கும் பாக உரிமையை வாபஸ் வாங்குகிறார்! தொழிற் சாலைக்கெதிராக அறிக்கை பறக் கிறது! அது மூடப்பட்டுவிட்டது! பழிக்குப்பழி வாங்கிவிட்டதில் மேயருக்குப் பரம திருப்தி! "பொதுநலவாதி" என்ற புகழும் நிலை நாட்டப்பட்டுவிட்டது! "எங் கள் மேயர் வாழ்க!" என்று மக் கள் கோஷிக்கிறார்கள். "ஆமாம். என் அருமைப் பொது மக்களின் சுகாதாரத்துக்காகத்தான் "பாக் டரியை மூடுவித்தேன்" எனக் கூறி, மேயர் "மக்கள் தலைவர்" ஆகிவிட்டார்!-இதுதான் "வாழும்

இனம்" கதை; பிரபல எழுத்தாளர் நாவற்குழியூர் நடராசன் எழுதியது.

காதாசிரியரின் பேனு இன்றைய அரசியலில், பொது மக்களின் கண்களுக்கு இலகுவில் பட்டுவிட முடியாத "திருகுதாளங்"களிற் சிலவற்றை சுவையாக அம்பலப்படுத்திவிடுவதில், பூரணமாக வெற்றி பெற்றிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

பாத்திரங்களைப் பொறுத்தவரை மேயர் கணபதிப்பிள்ளை, சுந்தரமூர்த்தி, வடிவேலு மூன்றும்தான் முதற் காட்சி தொடக்கம் கடைசிக்காட்சி வரை நாடகத்திலுள்ளன. மேயராக நடித்த எஸ். சுப்பிரமணியம் பாத்திரத்துடன் நன்கு இணைந்து, உணர்ச்சிகளை வெளிப்படுத்தி நடிக்க முயன்றிருக்கிறுர். சுந்தரமூர்த்தி பாத்திரத்தை ஏற்றிருந்த இ. மகேஸ்வரனும், பரவாயில்லை; அடிக்கடி சட்டைகளை மாற்றிக் கொண்டு, "ஸ்ரைலாக" நடித்து அநாயாசமாக வசனங்களைப் பேசியுள்ளார். ஆனுல், வடிவேலு பாத்திரத்தில் தோன்றிய அ. சிவபாதசுந்தரம் தான், 'அசல்' யாழ்ப்பாணத்தார் போல, இயல்பாகப் பேசி, இழுத்துக் கதைத்து 'மூக்குத்தூள் பட்டை' யோடு வந்து, நகைச்சுவையாக நடித்து, "சபாஷ்!" பெற்றுவிடுகிறுர்.

டொக்டர் விசுவநாதனை நடித்தவர் (இ. தயாபரன்) அளவுக்கு மீறி, அப்படிக்கழுத்தை ஆட்டிச் சிரித்துக் கொள்வது வெறும் போலி நடிப்பாகத் தெரிகிறதே!

மேயரின் மனைவியாக நடித்த செல்வி திலகா சபாரத்தினமும், வடிவேலுவின் மனைவி புவனேஷ்வரியாக நடித்த செல்வி சுகி இளையதம்பியும் பேசும் வசனங்கள் யாழ்ப்பாணத்துத் தமிழில் அமைக்கப்பட்டிருந்தாலும், அவர்களின் உச்சரிப்பில் கொழும்பு 7ன் வாடை அப்படியே வீசுகிறதே! குறைகள் அதிகமின்றி செல்வி திலகா நடித்திருக்கிறுர். செல்வி சுகிக்கு, நிறையப் பேசி, நடிக்க சந்தர்ப்பம் அதிகமில்லை.

டொக்டர் தம்பிராசா, அரியநாயகம், சோமபாலா, தொழிலாளி பாத்திரங்களில் தோன்றியவர்களும் பொதுவில் பரவாயில்லை.

வசனங்களில், அரசியல் வாதிகளுக்கு, "பளீர்! பளீர்!" என, உறைக்கக் கூடியதாக, அடிக்கடி "சவுக்கடி" கொடுக்கப்பட்டிருந்தது. சிரிக்கவும் சிந்திக்கவும் கூடிய வகையில், திரு. கே. சிவத்தம்பி வசனங்களை அமைத்திருந்தார். சிவத்தம்பி என்ருல், சிரிப்பென்று தானே, நாடக உலகில் இன்றைய அர்த்தம்?

காட்சிச் சோடனைகள் அமைத்தவர்களை, எவ்வளவு பாராட்டினுலும் தகும்! அத்தனை தத்ரூபமாக ஏழைத் தொழிலாளர் குடிசையையும், மேயரின் மாளிகையையும் அமைத்திருந்தார்கள்! ஆனுலும், ஒரு சமூக நாடகத்தில் காட்சி மாற்றம் செய்யும் போது

அத்தனை நிமிட இடைவெளி இருந்திருக்க வேண்டாமே? விறுவிறுப்பு இல்லாத நாடகத்தில் மேலும் மந்த நிலையை ஏற்படுத்தி, ரசிகர்களது பொறுமையைச் சோதிப்பது போலிருந்தது.

சமூகத்திலுள்ள ஏமாற்றுக்களைக் குத்திக் காட்டி தமிழ் நாடகங்கள் அரங்கேற்றுவதில், சில காலமாக பல்கலைக் கழக மாணவர்கள் முன்னணியிலிருந்து வருகிறார்கள். இந்த அரசியல் நெருக்கடி வேளையிலும், வழமை போலவே, "அரசியல் பின்னணி" கொண்ட ஒரு தமிழ் நாடகத்தை துணிவுடன் அரங்கேற்றிய பல்கலைக் கழக மாணவர்களை, நாடகத்தில் சில குறைகளிருந்த போதும் பாராட்டத்தான் வேண்டும்.

—யாழ். ''புதுமைப்பிரியன்''.

---

## உலகஞ்சுற்றும் சுடர் மொழிகள்.

தொகுப்பாளர் :
**துரை. முருகேசன்** கோயமுத்தூர்.

(1) நற்பெயரானது ஆன்மாவின் அருகிலுள்ள ஆபரணம்.

—"ஷேக்ஸ்பியர்"

(2) நல்லொழுக்கம் என்பது இனிமையான நறுமணப் பூண்டுக்கு நிகராகும். அதனை நசுக்கினால்தான் அதன் நறுமணம் கம்மென்று கமழும்.

—''பேகன்"

(3) நற்பெயரை நெருப்புக்கு நிகராகக் கூறலாம். அதை மூட்டி விடின் பின்பு அதனை எரியச்செய்வது எளிது. ஆனால், அணைத்து விடிலோ பின்பு அதனை மூட்டி எரியச் செய்வது கடினம்.

—''அப்துல்ரஹீம்"

(4) வணக்கம் அல்லது பிரார்த்தனை உதடுகளால் நிறைவேற்றக் கூடிய காரியம் அல்ல; அது உள்ளத்தினால் நிறைவேற்றக் கூடிய காரியமாகும்.

—''மகாத்மா காந்தி"

(5) உயர்ந்த உண்மை மலர்வது ஆழ்ந்த அன்பிலேதான்.

—''ஹீன்''

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி ஆசிரியர் சர்மா "கலைக்கதி"ரில் சில விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இலங்கை வானொலி கல்வி ஒலிபரப்பில் இவரது குரல் அடிக்கடி ஒலிக்கும்.

# அணுவுள் ஓர் அதிசயம்.

— அ. க. சர்மா B. Sc. —

**அணுவைப் பற்றிய பழங்காலக் கொள்கைகள்:** பொருளும், அதன் தன்மையும் அன்றிலிருந்தே சிந்தனைக்கு ஒரு விருந்தாக இருக்கிறது. தத்துவ ஆராய்ச்சிகளில் மேம்பட்டு விளங்கிய இந்தியர்கள் இது குறித்துத் தீவிரமாகச் சிந்தித்ததில் வியப்பொன்றும் இல்லை அல்லவா? கதிரவனின் ஒளியிலே மின்னி, மிதந்து வரும் தூசையும், கண்ணுக்கு ஒரு விருந்தாகும். வானவில்லையும் கண்டு, அவர்கள் அணுவைப் பற்றி அறிய முற்பட்டனர். ஒரு பொருளைத் துண்டித்துக் கொண்டே போனால் இறுதியாகப் பிரிக்க முடியாததொரு நுண்ணிய துகளைப் பெறலாமெனவும், பொருள்களெல்லாம் அத்தகைய துகளாலானவையே எனவும் அவர்கள் ஊகித்தனர்.

இந்தியாவிலே அணுக் கொள்கை தோன்றக் காரணமாயிருந்தவர் கபில முனிவரே. இவர் சக்தியின் அழியாமை விதியையும், பொருள்களின் சடத்துவத்தைப் பற்றியும் தனது சாங்கிய வேதாந்தத்திலே கூறியிருக்கிறார். இவரின் பின் பதஞ்சலி முனிவர் பொருள்களில் மிக நுண்ணிய துகள்கள் உள்ளன எனவும், இத்துகள்கள் ஆற்றலைப் பெற்று இறுதியில் பரமாணுக்களாகின்றன என்றும், இந்தப் பரமாணுக்களின் கூடுகையாலும், பிரிவாலும், பொருளின் அமைப்பிலே மாற்றம் ஏற்பட்டு "புதுப்பொருள்கள்" உண்டாகின்றன எனவும் கூறினார். இவரின் கருத்துப்படி, எல்லாப் பொருள்களும், வாயு, நீர், ஒளி, மண், என்ற நான்கு வகை அணுக்களாலானவை; எங்கும் பரந்து, எல்லாவற்றையும் ஊடுருவிநிற்கும் ஆகாசத்தில் இவை உள்ளன. அணுக்களின் சேர்க்கையாலும், பிரிவாலும் பொருள்கள் உண்டாகின்றன. வெப்ப -- ஒளி அணுக்கள் மற்றவகை அணுக்களைத் தாக்கி, அவற்றில் மாறுதல்களை உண்டாக்கும். இரசாயன மாறுதல்கள், இத்தகைய தாக்குதல்களால் நிகழக்கூடும். ஒரு பொருளில், அணுக்கள் சீரான வகையில் அமைந்திருந்தால், அது ஒழுங்கான படிகவடிவுடையதாயிருக்கும். இவையே அவற்றின் கருத்துக்கள்.

பழங்காலக் கிரேக்க தத்துவ ஆராய்ச்சியாளர்களும், பொருளின் அமைப்பைப் பற்றிப் பெரிதும் சிந்தித்திருக்கிறார்கள். அவர்களில் டெமொக்ரிட்டஸ் (Demogitus) என்னும் அறிஞர் கண்ட கொள்கை அதி முக்கிய முள்ளது. இவரது கருத்துப்படி பொருள்

கள், அணுக்கள், என்ற மிக நுண்ணியதுகளாலானவை. இவை வெற்றிடத்திலிருந்து, பலவகை மாறுதலுக்குட்படுகின்றன. மொழியின் நெடுங்கணக்கில் எழுத்துக்களைப் பலவிதமாக அமைப்பதால் எங்ஙனம் சொற்கள் தோன்றுகின்றனவோ அதே ரீதியில் அணுக்கள் பலவகையில் அமைந்து பொருள்களையாக்கும். இவ்வறிஞருக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட கொள்கைகளில், எபிக்யூரஸ் என்னும் அறிஞர் கொள்கையும் பிரதானமானது. இவரது கருத்தின்படி, அணுக்கள் நிறையுள்ளவை; இயற்கையில் உள்ள பொருள்களின் தன்மையையும், அங்கு நிகழும், விளைவுகளையும், இவரது கொள்கை வெகு தெளிவாக விளக்கும் ஆற்றல் பெற்றது. இரும்பின் காந்தத்தன்மையையும், உள்ளத்திலுண்டாகும் மன எழுச்சிகளையும் கூட இவர் தமது கொள்கையினால் விளக்க முற்பட்டிருக்கின்றார். இவரது கூரிய சிந்தனை வியப்பிற்குரியதே.

**டால்ட்டனின் கொள்கை**:- கிரேக்க தத்துவ அறிஞர்கள் பொருளின் அமைப்பைப் பற்றிப் பெரிதும் சிந்தித்திருக்கிறார்கள் என முன்னர் அறிந்தோம். அந்தத் தத்துவ அறிஞர்களின் அணுக்கொள்கைகள் தத்துவ விசாரணையின் அடிப்படையில் எழுந்தனவே தவிர விஞ்ஞான அடிப்படையில் தோன்றவில்லை. எனவே அவர்களின் கொள்கைகள் சோதிக்கப்பட்டு உறுதியாக்க முடியாதபடி தெளிவற்றிருப்பதில் வியப்பில்லை அல்லவா? இது அவர்களின் கொள்கைகளின் வளர்ச்சிக்குப் பெருந்தடையாயிருந்தது. 1840-ஆம் ஆண்டு ஜோன்டால்ட்டன் என்னும் ஆங்கில அறிஞர் அமைத்த அணுக்கொள்கை அணு அமைப்பைப் பற்றிய அறிவு வளர்ச்சிக்கு, அளப்பரிய தொண்டாற்றியிருக்கிறது. இவரது கொள்கையின்படி பொருள்கள் எல்லாம் அணுக்களாலானவை; பொருளொன்றின் அணுக்கள் அனைத்தும் ஒரே வகையின; பிறபொருட்களின் அணுக்கள், அளவிலும், நிறையிலும் வேறுபாடுகளுடையன; அவைகளை ஆக்கவோ, அழிக்கவோ முடியாது; இரு தனிமங்கள் ஒன்று கூடும் போது, அவ்விரண்டின் அணுக்கள் ஒன்று கூடி ஒரு கூட்டணுவாகின்றன; தனிமங்களின் கூடுகையின் போது மிகச் சிறிய முழு எண்ணிக்கையுள்ள அணுக்களே பங்கெடுத்துக் கொள்ளும். டால்ட்டனின் இந்த அணுக்கொள்கையைக் கொண்டு, பொருளியைவு விதிகளை விளக்கலாம். இதுபற்றி, இக் கொள்கை, விஞ்ஞான அடிப்படையில் எழுந்ததெனக்கருதி இதையாவரும் ஒப்புக் கொண்டனர்.

கூட்டுப் பொருள்களைப் பகுத்தும், அவற்றின் தனிம அணுக்கள் எவ்விகிதத்தில் கூடிஉள்ளன என அறிந்தும், ஒரு தனிமத்தின் அணுவைப்போல் பிறிதொன்றுஎத்தனை மடங்கு கனமானதென டால்ட்டன் கணக்கிட்டார். இயற்கையில் காணப்படும் இலேசான நீரகத்தைத் திட்டமாகக் கொண்டு, மற்றத் தனிமங்களின் அணுக்கள் இதைப் போல் எவ்வளவு கன

மானவை என அவர் அளவிட்டார். இந்த அளவு "தனிமத்தின் அணு நிறை" எனப்படும். எனவே இவரது கொள்கையினுல் "அணு நிறை" என்ற முக்கிய கருத்துப் பிறந்தது. இது ஒவ்வொரு தனிமத்தின் சிறப்பியல்பு எனத் தெளிவாகிறது. இப்போதைய அணு நிறை அளவுகளெல்லாம் ஒரு முக்கிய காரணம் பற்றி, தீயகத்தின் அணு நிறை 16 என்ற அடிப்படையிலேயே கொள்ளப்படுகின்றன. அணு நிறை அளவுகள் பல வழக்கிலுள.

பொருளியைபு விதிகளையும், பலவேறு வகையான இரசாயன விளைவுகளையும், விளக்குந் திறன் பெற்றிருந்த டால்ட்டனின் அணுக் கொள்கை இரசாயனத்தில் விரைவில் இடம் பெற்றதில் ஆச்சரிய மொன்று மில்லையல்லா? டால்ட்டனின் கொள்கையில் எழுந்த சில சொற்களின் இலக்கணத்தைப் பார்க்கலாம்.

**அணு**:- இது ஒரு தனிமத்தின், இரசாயன முறையில் பகுக்கப் படமுடியாத மிகச் சிறிய இம்மியாகும்.

**மூலக்கூறு (கூட்டணு)**:- இது தனிமத்தின் அல்லது கூட்டின், சாதாரண மாகத் தனித்திருக்கக் கூடிய மிகச்சிறிய இம்மியாகும்.

பொருள்கள் எல்லாம் மூலக்கூறுகளால் ஆக்கப்பட்டிருக்கின்றன என்று கருதும்போது, சில சந்தேகங்கள் எழுகின்றன. ஒரு பொருளின் மூலக்கூறுகள் இடைவெளியின்றிப் பிணைந்திருக்கின்றனவா? ஒரு பொருளின் மூலக்கூறுகளை ஒன்று சேர்த்து வைத்திருக்கும் சக்தி யாது? மூலக்கூறுகள் இயக்கம் பெற்றிருக்கின்றனவா?

இவை மிகவும் நியாயமான சந்தேகங்களாகத் தோன்றுகின்றன. ஒரு பொருளில் மூலக்கூறுகள் ஒன்றோடொன்று தொடாமல் மிக நெருக்கமாக அடுக்கப்பட்டுள்ளன வென்றும், அவை இயக்கம் பெற்றுள்ளனவென்றும் கருதுவதற்கு ஆதாரங்களுள. அவற்றுள் இடைவெளியுள்ள காரணத்தால் பொருள் "நுண் துளையுடைமை" (Porosiliy) என்ற குணத்தை அடைகிறது. மூலக்கூறுகளின் இடையேயுள்ள கவர்ச்சிச் சக்தியே அணுப்பிணைவு (Cohesion) என்று கூறப்படுகிறது. பொருளை வெப்பப்படுத்தி இந்த மூலக்கூறுகளின் இடைத்தூரத்தை அதிகப் படுத்தினுல் பொருளின் கனஅளவு அதிகமாதல், உருகுதல், ஆவியாதல் போன்ற பௌதிக மாறுதல்கள் ஏற்படுகின்றன.

19-ம் நூற்றுண்டு வரை அணு பிளக்கப்பட முடியாத, இறுதியான இம்மியெனவே கருதப் பட்டு வந்தது. 19-ம் நூற்றுண்டின் இறுதியில், ஆங்கிலப் பௌதிக மேதை சேர். தொம்ஸன் என்பார் அணுக்கள், சில சூழ்நிலை மாற்றத்தினுல் மின்னேற்றமுடைய நுண்ணிய இம்மிகளை வெளிவிடுகின்றதென அறிந்தார். இம் மின்னேற்றத்துகள் ஏவெக்ரான் அல்லது மின்னணு என அழைக்கப்பட்டது. எல்லா மின்னணுக்களும் ஒரே தன்மையான

என்பதும் ஆராய்ச்சிகளினல் தெளிவாக்கப்பட்டது. மின்னணுக்கள் மிக மிக இலேசானவை. 1840 மின்னணுக்கள் சேர்ந்து நிறையில் 1 நீரக அணுவை நிகர்க்கும் என்ருல் மின்னணு எவ்வளவு துல்லியமான தென அறியலாம். மேலும் மின்னணு எதிர் மின்னேற்றமுடையது எனவும் அறியப்பட்டது.

அணு, மின் நடுநிலை உள்ளது என்பது யாவரும் அறிந்ததே. எனவே அணு எதிர் மின்னேற்றமுள்ள இம்மிகளை உடையதாயின் நேர் மின்னேற்ற துகள்களும் அணுவில் இருக்க வேண்டுமல்லவா? அணுவில் நேர் மின்னேற்முள்ள இம்மிகளும் உண்டென 1910-ம் ஆண்டு ருதர் போர்ட்பிரபு நிருபித்தார். அவர் அணுவின் அமைப்பைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் வருமாறு:- அணு சூரிய மண்டலத்தை ஒத்த அமைப்பு உடையது. நாம் வாழும் பூமி சூரிய மண்டலத்தின் பகுதியே. பிரபஞ்சத்தின் அமைப்பு, சிருஷ்டியின் இறுதியான அணுவில் பிரதிபலிப்பது,விந்தையிலும்விந்தையே இயற்கை நமக்கு என்ன என்ன அதிசயங்களைத் தன்னுள் அடக்கியிருக்கின்றதென அறியத்தானே இன்று ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன! அணுவின் மையத்தில் உட்கரு என்ற பகுதியும், அதைச் சுற்றிலும், மின்னணு என்னும் துகள்களும் உள்ளன. மின்னணு மிக இலேசானதும், எதிர் மின்னேற்றமும் உடையதுமான துகள். அணுவின் நிறை முழுதும் அதன் உட்கருவில் செறிந்துள்ளது. இது நேர் மின்னேற்ற முடையது: அணுவின் மத்திய பாகமான உட்கருவைச் சுற்றி மின்னணுக்கள் தங்களுக்கென ஏற்பட்ட பாதைகளில், சூரியனை கிரகங்கள் சுற்றுவது போல், அதிக வேகமாக (விஞடிக்குச் சுமார் 20,000 மைல்) சுற்றுகின்றன.

அணு பிரிக்கப்பட முடியாத மிக சிறியதுகள் எனக் கூறும் டால்ட்டனின் அணுக்கொள்கையைத் தகர்த்த, இக் கொள்கை மின்னணுக் கொள்கை எனப்படும். இதை மறுமுறை கவனிப்போம்

(தொடரும்)

**கலைச்செல்வி விற்பனையாளர்கள்:**

**சுத்தானந்த பவன்**
நியூஸ் ஏஜன்ஸ்,
வவனியா.

**கலைச்சோலை நூலகம்**
80, வித்தியாலய வீதி,
திருக்கோணமலை.

இரத்தினபுரியில் வாழும் "தீவான்" சில சிறு கதைகளும் பல கவிதைகளும் எழுதியுள்ளார். நகைச்சுவையைக் கலந்து கடிதரூபத்தில் எழுதப்பட்ட கதை "திருவிளையாடல்".

# திருவிளையாடல்

—தீவான்—

பைத்தியகார ஆஸ்பத்திரி,
அங்கொடை,
பூலோகம்.

அன்புக்கடலான ஆண்டவனே!

வணக்கங்கோடி. இந்த அநாதைக்கு தாங்களாவது இரக்கங் காட்டுவீர்களா? சாவின் முனையிலே நின்றவனாய் அடியேன் இக் கடிதத்தைத் தங்களுக்கு வடித்து அனுப்புகிறேன், ஆதரவு நல்குவீர்கள் என்ற அசைக்க முடியாத எண்ணத்துடன். தவறிடின்-தங்கள் பதில் வானின்றிழிந்து வரத்தவறிடின், அடியேன் இவ்வுயிர் தரியேன்!

இந்த நவீன யுகத்தில் கடவுளுக்கு கடிதம் எழுதும் என்னைப் பார்த்து இந்த மானிட ஜன்மங்கள் நகைக்கத்தான் செய்யும். நகைத்து விட்டுப் போகட்டும். நாஸ்தீகப் பிண்டங்கள்! ஆனால் தங்களுக்கு இக்கடிதம் கிடைக்கும் என்பதை அடியேன் அறியாதவனா என்ன?

எத்தனையோ அற்ப ஜீவன்களின் முன் எழுந்தருளி இன்பம் பயத்த நீங்கள், எனக்கு, அதுவும் என்னை வாட்டும் இந்த அற்ப காதல் தூசைக் கைகூடச் செய்வதற்கு தயங்குவீர்களா? மாட்டீர்கள், மாட்டீர்கள்!

நான் படித்தவன், பண்புள்ளவன். ஆனால் பணக்காரனல்ல. இந்த ஒரே காரணத்திற்காகவே எனது மாமா தன் மகளை-என் அருமைக் காதலி கலாவை எனக்கு மணம் முடித்து வைக்க மறுத்துவிட்டார். கெஞ்சினேன், கூத்தாடினேன். நானும் கலாவும் சிறு வயது முதல் மண் குழைத்துச் சாப்பிட்ட தோஷத்தையெல்லாம் எடுத்து ஓதினேன். ஆனால் மாமா மசியவில்லை. என் செய்வேன். 'கலா!', கலா!' என்று கத்தியழுதேன். பெற்றேன் பித்த தானம். அதன் பயன், அங்கொடை ஆஸ்பத்திரி அபயமளித்தது.

இருந்தும், காதலி கலாவின்றி நான் இனி வாழேன். அவளைக் கைப் பிடிக்க வழியும் அறியேன். ஆகவே, எல்லாம் வல்ல தங்களிடம் அடைக்கலம் புகுந்தேன். எங்கே தங்கள் ஆதரவு? சிறிதும் தாமதம் வேண்டாம்.

—பக்தன் பசுபதி.

தேவலோகம்.

என் பக்த சிகாமணி பசுபதியே!

பதருதீர், பதருதீர். பாக்கியம் அத்தனையும் பக்கத்தே வருகிறது. உன் கடிதம் காணப் பெற்

றுக் களி கூர்ந்தேன். அதே நேரத்தில் கரையில் சோகமும் கொண்டேன். உன் போன்ற ஏழை அன்பர்களின் இன்னல்களைக் களைந்தெறிந்து, எண்ணங்களை நிறைவேற்றும் பொருட்டே நான் இவ்வுலகெங்கும் எழுந்தருளியுள்ளேன்.

ஆனால் என் பக்தனை நீ, வெயிலிற் புழுவாய்த் துடித்து காதலுக்காகக் கதறியழுததெல்லாம் என் காதிற்கெட்டவில்லையே! காரணம், நான் ஞான நிஷ்டையில் எனை மறந்து இருந்ததே. இனியும் அத்தகைய அசம்பாவிதம் ஏற்படாது, அப்பனே! உன் கண்ணனைய காதலைக் கை கூட்டும் பொருட்டு காரியத்தில் இறங்கிவிட்டேன். பொறுத்த தோடு சற்றுப் பொறுத்திரும், புதுவாழ்வு காணலாம்.

—ஆண்டவன்.

பைத்திய ஆஸ்பத்திரி,
பூலோகம்.

என் அன்பின் வடிவே,

ஆலால சுந்தரரே!

தங்கள் திருக்கடிதமும் திருவருளும் இவ்வளவு சீக்கிரத்தில் ஏழையான என்னை அணுகிவிடும் என்று நான் எண்ணியிருப்பேனு? நான் வாழும் காலம் நாயன்மார்களின் காலமோஎன்று கூட ஒரு கணம் எண்ணி வியந்தேன். தங்கள் கருணைக்கு நான் ஏது கைமாறு செய்வேன்? இல்லை, இல்லை, என்னை மன்னித்தாட்கொள்ளல் வேண்டும். எம் பிரானே! கைமாறு எதிர்பார்த்துக் காரியம் புரிவது எம் மானிடவர்க்கமன்றே! தங்களிடம் இப்பேச்சை எடுத்ததற்காக நான் நாக்கைப் பிடுங்கிக் கொள்ளட்டுமா? நயனங்களைப் பிய்த்துக் கொள்ளட்டுமா? "வேண்டாம். பக்தனே! வேண்டாம்" என்று உங்கள் அன்புக் கட்டளை அந்தரத்தில் ஒலிப்பதால் விட்டு விடுகிறேன்.

இனி, நீங்கள் கைகூட்ட விருக்கும் காதலுக்காகக் காத்திருக்கும்

அடியான் பசுபதி.

தேவலோகம்.

அடியான் பசுபதியே,

உன் அளவிலாப் புகழ்ச்சிக் கடிதம் கிட்டி அருவருப்புற்றேன். நவீன காலம் என்று உங்களால் வர்ணிக்கப்படும் இக்காலத்தில் உன் பால் இரங்கி, நீ ஓர் உத்தமன் என்பதை உய்த்துணர்ந்து, உனக்கு உதவி செய்ய முற்பட்டால், நீயோ கண்டறியாதன கண்டவன்போல் அகிலம் எங்கும் அதைப் பறைசாற்றி, என்னை அவஸ்தைக் குள்ளாக்குகிறுயே! இதைத் தெரிந்து தானே இக்கால மானிடர் கண்ணிலே மண்ணைத் தூவி விட்டு மறைந்து விடுகிறேன்.

பக்தா, என்னை அதிகம் புகழ்ந்தால், பாடினல் பலன் கிட்டி விடும் என்று பைத்திய ஆஸ்பத்திரியில் யார் புகன்றனர்? ஹ ஹ ஹ! பகற்கனவு காணுதே! அவை

தான் மானிடவர்க்கத்தின் பல வீனங்கள், அற்ப எண்ணங்கள். புரிந்ததா? என்னைப் புகழாதே அதோடு அதிக கடிதம் அனுப்பியும் தொலைத்து விடாதே! அவற்றுக்குப்பதில் கொண்டுவரும் கிங்கர தூதர்கள் 'சார்ஜ்' பண்ணும் பணத்தை யாரால் கட்டித் தொலைக்க முடியும்? ஏழைகளான உங்களோடு ஒட்டியுறவாடும் எனக்கெங்கே அப்பனே பணம் கிடைக்கப் போகிறது!

அத்தனையும் நன்றே நடந்தேறும், அவதியுறுதே.

—ஆண்டவன்.

பைத்தியகார ஆஸ்பத்திரி,
பூலோகம்.

ஆ ஆண்டவனே!

நீங்களும் என்னை மோசம் செய்து விட்டீர்களே! இது உங்கள் பெருந்தன்மைக்கு அழகா? பொற்புறு கொள்கைக்குப் பண்பாகுமா? காத்திருந்தேன் காத்திருந்தேன்-நீண்ட ஒரு மாதமாகக் காத்திருந்தேன். நீங்கள் அளிக்கப் போவதாகக் கூறிய அரும் பெரும் பலனை எதிர் பார்த்து. ஆனால் இன்னுந்தான் அந்தப் பலன் என்னை அணுகவில்லையே! இப்படி என்னை நட்டாற்றில் கைவிடல் கருணைக் கடலுக்கு அழகாமோ? என் காதலி கலாவுக்கு நான் கொடுத்த கடைசி நேர வாக்கு காற்றுறு சாம்பல் தானே? கூறு இறைவா கூறு! இனியும் உயிர் சுமந்து வாழேன். உடன் பதில் வேண்டும்.

பசுபதி.

அஞ்சலகம் (தேவலோகம்)
அங்கொடை.

அன்புள்ள மாப்பிள்ளை வாள்!

அஞ்சேல்! அஞ்சேல்! உன் உயிரனைய காதலி கலா மணியை உனக்கே தந்தேன், தந்தேன்! கவலை தவிர். நீர் ஆண்டவனுக்கு எழுதிய கடிதம் அத்தனையும் என் கையில் சிக்கின-நான் இந்த ஊர் போஸ்ட் மாஸ்டர் என்ற படியால். ஆண்டவனுக்கு விலாசமிட்ட அத்தனை கடிதங்களையும் ஓர் பியோன் மூலம் பெற்றுக் கொண்டேன். பிரித்துப் படித்தேன். நீர் என் மகள் மீது கொண்டிருக்கும் மாசற்ற காதலைக் கண்டேன். கண்ணீருகுத்தேன் நான் செய்த தவறுக்காக. அவளற்று நீ வாழமாட்டாய், பைத்தியம் பிடித்து இறந்து விடுவாய் என்பதையெல்லாம் அறிந்தேன். அத்தோடு பல பாச நேசங்களை முன்னிட்டே இந்த முடிவுக்கு வந்தேன். அடுத்த வாரமே நேரில் வந்து சந்திக்கிறேன்.

இப்படிக்கு,
அன்புமாமா மாணிக்கவாசகர்.

பைத்தியகார ஆஸ்பத்திரி,
அங்கொடை.

கண்ணே கலா !

அடித்ததடியம்மா அதிர்ஷ்டம்! வெடித்ததடி பேரின்பம்! துடிப்பிதென்ன என்று கேட்கத் துடிக்கிருயா? காதைக் கொடுத்துக் கேள். கண்ணை. இல்லை, இல்லை. கண்களை அகல விரித்துப் பார்! அப்பொழுதுதான் நான் நம்

காதல் தாஜ்மஹாலைக் கட்டி முடிப்பதற்குப் போட்ட அரும் பெருந் திட்டம் உன் அகத்துள் நுழைந்து குருதியோட்டத்தில் கலந்து உன்னைக் குதிக்கச் செய்யும்.

உனது அப்பா (என் அருமை மாமா) அங்கொடை அஞ்சலகத்தில் போஸ்ட் மாஸ்டராகக் கடமையாற்றுகிறார் என்பதை நானறிவேன். ஆகவே நம் மாசற்ற காதலை விளக்கி, அழாக் குறையாக ஆண்டவனுக்கு விலாசமிட்டுப் பல கடிதம் அனுப்பினேன், உங்கப்பாவின் கையில் கிட்டும்படி. அப்படியே அத்தனையும் அழகுற நடந்தேறின. அதன் பயன் உன் அப்பாவின் கல் மனம் கரைந்தது. நம் காதல் மணத்தை நிறைவேற்றவும் அவர் மனம் சுரந்துவிட்டது. இனியென்ன, அடுத்த கிழமை உன்னை மணவறையில் சந்திக்கப்போகும் அருமைக் காதலன்,

பசுபதி.

பி. கு. இப்பொழுது எனக்குப் பைத்தியமெல்லாம் பறந்து விட்டது, கண்ணே-பதி.

கண்டி,
கற்கண்டு வாசா.

ஆகா, என்ன அருமை ஐடியா! சாணக்கியனையும் தலை கவிழச் செய்யும் அபாரத்திட்டமன்றோ அது! ஐந்தாண்டு காலமாக பைத்தியகார ஆஸ்பத்திரியிலிருந்து வகுத்த திட்டமா இது? என்ன அப்படித்துள்ளி மகிழ்கிறீரா? உன் தலையில் இடி விழ! எனக்கு மணமாகி ஐந்தாண்டுகள் ஆகுதையா, ஐந்தாண்டுகள்! தப்பித் தவறியாவது இனிக் கடிதம் போட்டுவிட வேண்டாம். நீர் அனுப்பிய கடிதம் என் கணவன் கையில் கிடைத்திருந்தால்......! நல்ல காலம் என் கையில் கிடைத்ததோ நான் பிழைத்தேனே! எனது அப்பா அங்கொடை அஞ்சலகத்தில் வேலை பார்க்கிறார் என்பதற்காக அவர் தான் உமக்குப் பதில் எழுதினார் என்பது மாபைத்தியகாரத்தனம்.

—கலா.

பி. கு.-பைத்தியம் இன்னும் முற்றாகத் தீரவில்லைப் போலிருக்கிறது-க.

பை. ஆ. பூலோகம்

ஐயோ கடவுளே!

அடியேன் அலைகடலை நோக்கி ஓடுகிறேன். இன்னும் சற்றுநேரத்தில் எனது ஆவி, தங்கள் பாதத்தே சரணடையும்.

—பதி.

# தமிழன்னைக் கோவிலிலே, நினைவிருத்த வேண்டுவது.

"கல்லைப் பிசைந்து கனியாக்கிச் சைவரசம்
புல்லப் பிழிந்து புதுமைசெயும், பொல்லாத
தொல்லைக் கடற்பிறவித் துன்பகல ஈதென்ன
மல்லற் கரைகாட்டும் வான்சோதி வாசகமே"

"இறைவனை ஒருவாறு பூச்சியத்திற்கு (o) ஒப்பிடலாம். பூச்சியம் இன்றேல் கணிதமும் பயன்வற்றும். அங்ஙனமே இறைவன் இலனேல் உலகமும் உலக நுகர்ச்சியும் இல்லையாம். இப் பூச்சியமானது, ஒன்று முதலாக ஒன்பது இறுதியாக உள்ள எண்களையெல்லாம், பத்தே, நூறே, ஆயிரமே என்றுங்கு மதிப்பேற்றி வருவது கண்கூடு. அங்ஙனமே இறைவனும் தனக்கெனக் கொள்ளும் உருவம், பயன் என்பன இன்றி ஏனையவற்றிற்கு உருவமும் பயனும் அன்ன பிறவும் வழங்கி வருவன் என்க.

கணித இயல்பு அறியார் பூச்சியத்தின் மதிப்பையறியாத வாறு போல, இறைவன் இயல்பு உணரார் இறைவனை இகழ்ந்தொதுக்குவர். இவர் சூழலில் நந்தமிழ் மக்கள் அகப்படாது உய்வடைதற்கு மாணிக்கவாசகப் பெருமான் அருளிய திருவாசகம் நல்வழிகாட்டியாமென்க"

இவ்வாறு கவிதையும் உரையுந்தந்து (திருவாசக உரை) உலகியல் விளக்கம் பாரதீய இலக்கணம் இவற்றைத் தமிழன்னைக்கு நிவேதித்து அன்னைக் கோவிலில் ஒழியாத ஓவியமாகவும், அழியாத காவியமாகவும், சிதையாத சிற்பமாகவும் நிறைந்தவர் மாவைக் கௌணியன் வெண்ணெய்க் கண்ணனாகும் நவநீத கிருஷ்ண பாரதியார் ஆவர்.

பண்டிதமணியவர்களின் நாவும், கரமும் நம்மை விட்டு மறைந்து ஆண்டுகள் ஐந்து ஆகின்றன. அவரது நினைவு நாள் வரும் ஜனவரி மாதம் ஏழாந் தேதியாகும்.

மறப்பிருப்பினன்றோ நினைவு வேண்டுவது. ஆயினும் அவரது சிறந்த செந்தமிழ்த்தேன் கவிகளைக் கலைச்செல்வி தமிழன்பர்களுக்குத் தர விழைகிறாள். " **புத்திளஞ்செங் கதிர்** " கவிதைமுத்துக்கள் கலைச்செல்வியின் ஆரமாக அணிதருவனவாகும்.

# இவரைக் கேளுங்கள்.

இசையுலகிலே மங்காது ஒளிவிடும் ஒரு சிலருள் குறிப்பிடக் கூடியவர் இசைப்புலவர் சங்கீதபூஷணம். ந. சண்முகரத்தினம் அவர்கள். சங்கீத பரம்பரையிலே தோன்றிய இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே தம் திறமையை வளர்த்து இந்தியாவிலுள்ள தலை சிறந்த சங்கீத வித்துவான்களின் ஆசியோடும், பாராட்டுதலோடும்



இசைப்புலவர்,

**திரு. ந. சண்முகரத்னம்.**

பரீட்சைகளில் சித்தியடைந்தார். 1943-ம் ஆண்டு தொடக்கம் அகில இந்திய வானொலியில் பாடிவரும் இலங்கைக் கலைஞர் நமது இசைப் புலவர் ஒருவரே! பல ஆண்டுகளாக இலங்கை வானொலியிலும் முழு நேரக் கச்சேரிகள் செய்து வருகின்றார். சென்னையிலுள்ள சங்கீதக் கல்லூரியொன்றில் சில காலம் ஆசிரியராகவுமிருந்தார். சொந்தமாகப் பாடல்கள் இயற்றும் ஆற்றலும் இவருக்குண்டு.

தற்போது சென்னையிலே நடைபெறும் இசை விழாக்களை ஒழுங்கு செய்யும் நிர்வாகிகள், ஈழத்தின் பிரதிநிதியாக திரு. ந. சண்முகரத்னம் அவர்களை அழைத்துக் கச்சேரி செய்விக்கும் நாள் வெகு தூரத்தி லில்லை என்பது எமது எண்ணம்.

இசைத்துறையிலே நமது வாசக நேயர்கட்கு ஏற்படும் எந்த விதமான சந்தேகத்தையும் தீர்ப்பதற்கு இசைப்புலவர் இசைந்துள் ளார். வாசகர்கள் தங்கள் கேள்விகளைத் தெளிவாக எழுதிக் கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**இவரைக் கேளுங்கள்.**
**மே / பா கலைச்செல்வி,**
கந்தரோடை,
சுன்னுகம்.

## சிவாஜி.

இந்தியா, இலங்கையிலுள்ள ஆங்கில, தமிழ், சிங்களப் பத்திரிகைகளில் கூடார்த்தப் படங்கள் (Cartoons) வரைந்து மக்களின் பாராட்டைப் பெற்ற இலங்கைக் கலைஞர் "சிவாஜி"யின் கூடார்த்தப் படங்கள் பொங்கல் இதழிலிருந்து 'கலைச்செல்வி'யில் தொடர்ந்து வெளியிடப்படும்.

# கண்டதும் கேட்டதும்

கொககுவில் இந்துக் கல்லூரி சிரேஷ்ட மாணவர் மன்றத்தின் வருடாந்த தேநீர் விருந்துவைப வம் சமீபத்தில் நடைபெற்றது. செல்வன். சிறீகாந்தன், செல்வி. கமலா தேவி ஆகியோர் பிரதம விருந்தினர்களான டாக்டர் வாலுப்பிள்ளையையும், திருமதி வாலுப்பிள்ளையையும் மலர்மாலை சூட்டி வரவேற்றனர். செல்வன். மகேஸ்வரன், திரு. A. R. இராஜ நாயகம், திரு. S. H. பேரின்ப நாயகம் முதலியோர் விருந்தி னரை உபசரித்து பேசினர்கள். தேநீர் விருந்தைத் தொடர்ந்து மாணவர்கள் நாடக விருந்து அளித்தார்கள்.

* * *

யாழ்ப்பாணக் கல்லூரிப் பிரதம பாடசாலையின் வருடாந்தச் சங்கீத விழா 21-11-58-ல் 'ஒட்லி' மண்ட பத்தில் நடைபெற்றது. சின்னஞ் சிறு பாலகர்கள் சிந்தை ஒருமித்து ஆடிய நடனங்கள், வண்ணத்திப் பூச்சி போலப் பறந்து மறைந்த வண்ணத்திப்பூச்சி நடனம், ஆங்கில நாடகம் முதலிய நிகழ்ச்சிகள் நன்ருக இருந்தன. பாடசாலைப் பிரதம ஆசிரியர் திரு. தா. பொன் னம்பலம் எழுதித் தயாரித்த தமிழ் நாடகம் விழாவின் சிகரமாக இருந் தது. யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறும் எந்த விஷயமும் நிர் வாகத் திறமையுடையது என்ப தற்கு இந்த விழாவும் சான்று.

மானிப்பாய் மெமோறியல் கல் லூரியில், பிரதம பாடசாலையின் கதம்பக்கச்சேரி சென்ற 22-11-58 -ல் நடைபெற்றது. ஆடிப்பாடி அழகாகப் பேசிச் சபையினரை மகிழ்வித்தார்கள் சிறுவர், சிறுமி யர், ஆசிரியர் நாவேந்தன் யாழ்ப் பாணப் பேச்சுத் தமிழில் எழுதித் தயாரித்த "உழைப்பவனுக்கே உரிமை" என்ற நாடகம் நல்ல தொரு கருத்தை மக்கள் மனதிற் பதிய வைத்து, எல்லோரது பாராட்டுதலையும் பெற்றது.

* * *

திருக்கோணமலையில் நாடகக் கலையை வளர்பதற்காக சென்ற 22-11-58-ல் கலைவாணி நாடக மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. தொடக்க விழாவிற்கு நீர்ப்பா சனப் பொறிஞர் திரு. ப. சிவ சுப்பிரமணியம் தலைமை தாங்கி ஞர்கள். திரு. ஜே. ஜோன் எழு திய "பழிக்குப்பழி" என்ற சரித் திர நாடகமும், திருமதி கௌரி பரமேஸ்வரனின் இசை விருந்தும், செல்வி. ராஜாம்பிகை நடராசா வின் நடன விருந்தும், இலங்கை வானொலிக் கலைஞர்கள் பங்குபற் றிய திரு. T. S. பிச்சையப்பா எழு தித் தயாரித்த ஹாஸ்ய நாடகமும் விழாவில் இடம்பெற்றன. மன்றத் தின் செயலாளராக திரு. தாபி. எஸ். ரமணி அவர்கள் கடமை யாற்றுகின்ருர்கள்.

காலஞ்சென்றதமிழ்ப்பேரறிஞர் கணேசையர் அவர்களுக்கு ஒரு நினைவுச்சின்னம் அமைப்பதுபற்றி ஆலோசிக்கும் கூட்டம் சென்ற 30-11-58-ல் வறுத்தலைவிளான் மருதடி விநாயகராலயத்தில் நடைபெற்றது. நினைவுச் சின்ன அமைப்புச் சபையின் தலைவராகப் பண்டிதர். இ. நமசிவாயம் அவர்களும், செயலாளர்களாக பண்டிதர். வ. நடராசா, பண்டிதர். வ. முத்துக்குமாரு ஆகியோரும் பொருளாளராக சி. நாகலிங்கம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

* * *

சமீபத்தில் நடைபெற்ற அண்ணாமலை இசைத்தமிழ் மன்றச் செயற்குழுக்கூட்டத்தில், அதன் பொதுக்கூட்டம், ஆண்டுவிழா ஆகியவை பற்றி ஆலோசிக்கப்பட்டன. மகாவித்துவான் ஸ்ரீ கணேசையர், வைத்திய கலாநிதி அண்ணாமலை ஆகியோரின் பிரிவிற்காக வருந்தும் அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

செங்குந்த இந்துக் கல்லூரி இந்துசமய வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் நாவலர் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திரு. கு. சோமசுந்தரம் அவர்களின் தலைமையில் திரு. பொ. இராமசாமி அவர்கள் நாவலரைப்பற்றி ஓர் அருமையான சொற்பொழிவு நிகழ்த்தினர்.

* * *

யாழ்-த. எ. சங்கத்தின் சிறப்புக் கூட்டம் கவிஞர். செல்லையா அவர்களின் தலைமையில் பாரதி பாஷிய வித்தியாசாலையில் நடைபெற்றது. "புதுமைப் பித்தன் கதைகள்" என்பது பற்றி "தேவன்-யாழ்ப்பாணம்" அவர்கள் பேசினர்கள். தொடர்ந்து நடைபெற்ற காரசாரமான விவாதத்தில் திருவாளர்கள் கனக - செந்திநாதன், கே. டானியேல் ஆகியோர் பங்குபற்றினர்.

---


## உனக்காக, கண்ணே!

உள்ளத்தை உருக்கும் உணர்ச்சி மிக்க இத் தொடர்கதையில் காதலும் சோகமும் கரைபுரண்டோடுகின்றன.

**அடுத்த இதழில் ஆரம்பம்.**

எழுதியவர்: **சிற்பி**

# நீதியரசர் நாகலிங்கம்



புகழ் பெற்ற லிங்கம் சகோதரர்களில் ஒருவரான நீதியரசர் நாகலிங்கம் அவர்களின் மறைவு இலங்கை மக்கள் அனைவருக்குமே பெரு நஷ்டமாகும். மாணவனாக, நியாயவாதியாக, நீதியரசராக, சமூக சேவகனாக இருந்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வெற்றி இவரை நாடிவந்துள்ளது. 1947-ம் ஆண்டில் உயர் நீதிமன்றத்து நீதியரசராக நியமனம் பெற்ற முதல் தமிழர் இவரே. பல சந்தர்ப்பங்களில் பதில் பிரதம நீதியரசராகவும், சில காலம் இராணி மாளிகையிலிருந்து மகாதேசாதிபதியாகவும் கடமையாற்றி எல்லாச் சாகியத்தாரின் நன்மதிப்பையும் பெற்றுள்ளார். சட்டப் புத்தகங்களுடன் வாழ்ந்த இவர் சிறந்த கலா ரசிகர் என்பது பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கலாம். இசை, நாடகம் ஆகியவற்றில் அதிக ஈடுபாடுடையவர். இவரது பெருமுயற்சியால் உருவான கொழும்பு இந்துக் கல்லூரி இவரின் நினைவை என்றென்றும் நிலைநிறுத்தும். இப்பெருந்தகையாளரின் பிரிவால் வருந்தும் அனைவருக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

## சந்தா நேயர்களுக்கு

"கலைச்செல்வி" இதழ்கள் ஒழுங்காகக் கிடைப்பதில்லையெனச் சில நேயர்கள் எழுதியுள்ளனர். மூன்று தடவை சரிபார்த்தபின்புதான் தபால் நிலையத்திற்குப் பிரதிகளை அனுப்புகின்றோம். பத்திரிகை கிடைக்காத நேயர்கள் தங்கள் பகுதித் தபால் நிலைய அதிகாரிக்கு அறிவித்துவிட்டு, நமது அலுவலகத்திற்கும் எழுதவேண்டும். சந்தா எண்ணைக் குறிப்பிட மறக்கவேண்டாம்.

**நிர்வாகி; கலைச்செல்வி.**

"ஏன் படைத்தாய்?" என்று இறைவனையே கேட்ட மஞ்சுளாவை (சித்திரா) "ஏமாற்றுக்காரி" என்று திட்டுகின்றான் கதாநாயகன் பூங்குயில். "ஓடிவா, உயிர்காக்க!" என்று பூங்குயிலை அழைக்கின்றான் நண்பன் சோமு. "உங்களுக்கு மட்டும்" என்று தன் உள்ளந்திறந்து காட்டுகின்றாள் சித்திரா. சிக்கல் நிறைந்த இக்கதையின் கடைசிக்கட்டம் இப்போது வெளியாகின்றது. இப்புதுமைத் தொடரில் பங்குபற்றியவர்கள்: சிற்பி, கொழும்பு-சிவம், சோமசுந்தரன், காவலூர், அம்பி, வரதர்.

# இன்பம் சிரிக்கிறது!

— வரதர் —

'கலைச்செல்வி' ஆசிரியருக்குநல்ல கதைகள் கிடைக்கவில்லைப்போலிருக்கிறது. இல்லாவிட்டால் ஐந்து வருடங்களுக்கு முன்னால் வெளிவந்த—சில இதழ்களை மட்டும் உதிர்த்துவிட்டு மறைந்த — "சித்திரம்" என்ற திங்கள் இதழிலிருந்து இப்படி ஒரு தொடர் சித்திரத்தைக் களவாடியிருப்பாரா?...... சென்ற சில மாதங்களாக "ஏன்படைத்தாய்?" ஏமாற்றுக்காரி", "ஓடிவா உயிர்காக்க" "உங்களுக்கு மட்டும்" என்றபெயர்களில் வெளிவந்த சித்திராவின் வரலாறு இருக்கிறதே, அவை எழுத்துக்கு எழுத்து அப்படியே 'சித்திர'த்தில் வெளி வந்தவைதான்! இவ்வளவோடு இந்த நாடகம் நின்றுவிட்டால் பரவாயில்லை. இதற்கும் மேலே ஒருபடி போய் புதிதாக இதற்கு ஒரு 'முடிவுரை'யும் எழுதி விடுவார் என்ற பயத்தினால்தான் நானே இதை எழுத முன் வந்துவிட்டேன்.

நான்—

நான் தான் அந்தச் சித்திராவின் மாமா! நீங்கள் அறிந்த மட்டில் ஒரு அகம்பாவம் பிடித்த பணக்காரன்; படாடோபக்காரன்; கருத்தொருமித்த காதல் இருவரைப் பிய்த்துவிட்ட கொடியவன்!

சமூகத்தில் எப்படி வாழ வேண்டுமென்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டு அதற்கேற்ப வாழ்பவனுக்கு இந்தப் பட்டங்கள்தான் தகுதியானவையென்றால் அவைகளை நான் மனமுவந்து ஏற்றுக் கொள்கிறேன்; 'வாழ்க்கை' என்பதைப் பற்றிச் சற்றேனும் சிந்தியாமல் கற்பனை உலகிலே மிதந்து வாழ்வை நாசம் செய்கிறவர்கள் 'மேதாவி'களாக இருந்துவிட்டுப் போகட்டும்!

'பூங்குயில்' என்ற மோசக்காரன் தன்னுடைய எழுத்துத் திறமையினாலே என் சித்திராவின் வாழ்வை நாசம் செய்யப் பார்த்தான். அவனுடைய கதை

களிலே வருகிற கதாபாத்திரங்களில் ஒன்ருகி விடலாமென்று சித்திரா மனக்கோட்டை கட்டிஞள். அவள் மட்டுமென்ன அந்தச் சோமு கூட-வெறும் படிப்பிஞல் மட்டும் அறிவு வந்து விடாது அனுபவமும் வயதும் அதற்குத் தேவை என்பதற்கு அவனும் ஒரு சாட்சி...குறுக்கே நுழைந்து விட்டேன்; மன்னியுங்கள் ஆரம்பத்திலிருந்தே சொல்லுகிறேன்.

எனக்குப் பிள்ளைகள் இல்லை. பிள்ளை இல்லாதவர்களுக்குத் தான் பிள்ளைகளின்மேல் எவ்வளவு ஆசை! என்னுடைய நிலையில் உள்ளவர்களுக்குத்தான் அது தெரியும். என்னுடைய ஏழைச் சகோதரியின் குழந்தைகளில் ஒன்றை நான் எடுத்து வளர்க்க விரும்பினேன். அது 'சித்திரா' வாகத்தான் இருக்க வேண்டுமென்று நான் வற்புறுத்தவில்லை. ஆனல் ஒரே ஒரு குழந்தையைத் தான் நான் எடுத்துக் கொள்ள விரும்பினேன். சித்திரா சிறு குழந்தையாக இருந்தாள்; மற்றக் குழந்தைகளிலும் பார்க்க கவர்ச்சியாகவும் விளங்கினள். அவளை எடுத்துக் கொண்டேன். என்னுடைய செல்வ மாளிகையிலே அவள் ராணியாக வளர்ந்தாள். அதே சமயத்தில் அவளுடைய சகோதரிகளும் அதே மாதிரி வளர நான் வசதி செய்யவில்லையே என்று குறை சொல்பவர்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அவர்கள் கற்பனை உலகிலே வாழ்கிறவர்கள். சித்திராவைப் போல மற்றவர்களும் வளர நான் வசதி செய்யவில்லையே தவிர அவ்வப்போது அவர்களுக்குப் பல உதவிகளையும் செய்திருக்கிறேன். ஆனல் அது சித்திராவுக்குக்கூடத் தெரியாது!

செல்வச் சொகுசோடு வளர்ந்த சித்திரா வயதுக்கு மிஞ்சியபூரிப்போடும் எழிலோடும் விளங்கிஞள்; பள்ளிக்கூடப் படிப்பிலும் சரி, பொது அறிவிலும் சரி, வயதுக்குமிஞ்சிய சிறப்புக் காட்டிஞள். பத்திரிகைகள் புத்தகங்கள் படிப்பதில் அவளுக்குத் தனி ஆர்வம். அவை அவளுடைய அறிவை வளர்த்தன. ஆனல்-நான் நினைக்கிறேன் — அவை வெறும் அறிவை மட்டுமல்ல; ஏதோ பல இலட்சியக் கனவுகளையும் அவள் உள்ளதில் நிரப்பி விட்டன. இளம் உள்ளங்களில் இத்தகைய கனவுகள் ஏற்படுவது இயல்புதான். நான் கூட ஒரு காலத்தில் "இலட்சியவாதி" யாக இருந்தவன்தானே!

'பூங்குயில்' என்ற எழுத்தாளனைச் சித்திரா வீட்டுக்கு அழைத்து வந்த போது நான் மகிழ்ச்சிமட்டுமல்ல, பெருமையும் அடைந்தேன்.

'பூங்குயில்'!

அவனுடைய கதைகளை நான் அதற்கு முன்பே படித்திருக்கிறேன். எவ்வளவு அருமையாக எழுதுவான்! அவை வெறும் சித்திரங்கள் மட்டுமல்ல; அவற்றைப் படிப்பவனை நிச்சயம் ஒரு

நல்லவனுக்கும் தன்மை வாய்ந்தவை! அவற்றை எழுதுபவனும் உண்மையில் குணத்தின் குன்ருக, பண்பாட்டின் சிகரமாக, இலட்சிய மனிதனுக விளங்குவானென்று நினைத்தேன். அதனுல் தான் பெருமையோடு அவனை வரவேற்றேன். அவனோடு சித்திரா பழகுவதைப்பற்றி எவ்வித கவலையுமில்லாமலிருந்தேன். ஏன் நான்கூட ஆரம்பத்தில் நினைத்தேன், சித்திராவை அவனுக்கே மணம் செய்து விடலாமென்று!

ஆனல்—

அவனோடு சில நாட்கள் பழகியதில் எனக்கு அவனைப் பிடிக்காமல் போய் விட்டது! அவனுடைய எழுத்துக்களோடு ஒன்றிப் பழகலாமே தவிர, அவனோடு பழகுவது நல்லதல்லவென்று எனக்குத் தோன்றிற்று. எந்த மனிதனையும் அவனுடைய சிறு சிறு செயல்கள், பேச்சுகளிலிருந்தே நான் அளந்தறிந்து விடுவேன். அநேகமாக என்னுடைய மதிப்பீடு தவறிவிடுவதில்லை.

இன்னொரு காரணத்தை நான் சொன்னல், என்னைப்பற்றி நீங்கள் தாழ்வாக நினைப்பீர்கள். ஆனலும் என் மனதில் சரியென்று பட்டதை நான் சொல்லத்தான் போகிறேன்.

பூங்குயில் ஒரு ஏழை எழுத்தாளன். ஏழையாக இருப்பது இந்த நாட்டில் அதிசயமில்லை. அது அவனுடைய குற்றமுமல்ல. ஆனல் அந்த ஏழை என் சித்திராவைத் தன் வாழ்க்கைத் துணையாகக் கொண்டால், அவர்கள் வாழ்வு மகிழ்ச்சியானதாகி இருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை. சிறு குழந்தை முதற்கொண்டு இவள் செல்வத்தில் புரண்டவள்; இவளுடைய ஒரு நாள் செலவை, அவன் ஒருமாதத்தில் உழைக்கமாட்டாதவன்! "'காதல் தெய்வீகமானது" என்கிருர்கள்; 'அது அந்தஸ்து வித்தியாசம் பாராதது" என்கிருர்கள். கதைகளில் படிக்கும்போது நன்ருகத்தானிருக்கிறது. ஆனல் வாழ்க்கையில்? ஒருவனுக்கோ ஒருத்திக்கோ வெறும் காதல்மட்டும் வாழ்க்கையின் முழு இன்பத்தையும் அளித்துவிடமுடியாது! முகத்திற்குப் பூசும் பௌடர் முதற்கொண்டு வயிற்றிற்குச் சாப்பிடும் உணவுவரை, எத்தனையோவித தேவைகள் எல்லாம் பூரணமாகும் போதுதான் வாழ்க்கை நிறைவு படுகிறது. காதலுக்காகத் "தியாகம்"செய்யலாம் என்பார்கள். ஆயிரத்தில் ஒருவர் அப்படி இருக்கலாம். மற்றதெல்லாம் வெறும் உடற் கவர்ச்சியில் தொன்றுகிற காதல்கள்; அல்லது புகழ்க் கவர்ச்சியில் தோன்றுகிற காதல்கள்! 'கவர்ச்சி' என்பது பழகப் பழக குறைந்துபோய்விடும். பிறகு தான் அனுபவிக்க வேண்டிய பிற இன்பங்களை மனம் நாடும். அப்போது—

சித்திராவின் வாழ்க்கை இப்படி ஏமாற்றமாக மாறிவிடக் கூடாதே என்றுதான் நான் சிந்தித்தேன். அதனுல்தான் அவர்களுக்கிடையே 'காதல்' என்ற பேச்சு வந்தது அவனை விரட்டியடித்தேன். உண்மையில் அவன் குணத்தில் நல்லவனுக எனக்குத் தோன்றியிருந்தால், சித்திரா கதறித்துடித்த

போது ஒருவேளை மனம் மாறியிருப்பேன். மல்லிகையின் மணம் போன்ற கருத்துக்களை எழுதும் அந்த எழுத்தாளனுடைய இதயத்தினுள்ளே சாக்கடையின் நாற்றம் இருப்பதாக எனக்குத் தோன்றிற்று. அதனுலேதான் மனதைக் கல்லாக்கிக் கொண்டு சித்திராவின் காதலை முறித்தே விடுவதென்று உறுதி கொண்டேன்.

டாக்டர் சோமு இருக்கிருனே, அவன் நல்லவன்; நல்ல அந்தஸ்தில் உள்ளவன்; உறவு முறையானவன்; அவன் சித்திராவுக்கு பொருத்தமாக இருப்பானென்று நினைத்து அவனைச் சித்திராவோடு பழகச் செய்தேன். அவனிடம் சித்திரா தன்னுடைய காதல் கதையைச் சொல்லி புலம்பியிருக்கிருள். சோமு நல்லவனென்று சொன்னேன் அல்லவா! நல்லவனே தவர உலக அனுபவம் ஏற்படாத சிறுவன்தானே! சித்திராவின் நிலையைக் கண்டு அவன் உருகிவிட்டான். அதோடுமட்டும் நிற்காமல் அவளைச் சகோதரி உறவில் வைத்து, அவளுடைய 'தெய்வீக'க் காதலைக் கைகூடச் செய்யும் திருப்பணியையும் தன் தலையில் போட்டுக் கொண்டான்! ஐயோ, பாவம்; அப்பாவிப் பையன்!

இதற்கிடையில் சித்திராவின் உடல் நிலை மகா மோசமாகிவிட்டது. பூரித்து மலர இருந்த மொட்டு வாடிச் சுருங்கிவிட்டது. கருகி விடுமோ என்ற பயம்என் நெஞ்சைத்தொட்டுவிட்டது. நான் பட்ட வேதனையை என் போன்ற நிலையில் அகப்பட்ட ஒரு தந்தைதான் உணர முடியும்! கடைசியாய் ஒரு தந்திரம் செய்தேன்.

''சித்திரா", நான் தான் தவறு செய்துவிட்டேன். உங்களுடைய உண்மைக் காதலின் அருமை தெரியாமல் நடந்துவிட்டேன், எப்படியும் அந்தப் பூங்குயிலைக் கண்டு பிடித்து உன்னிடம் சேர்ப்பிக்கிறேன்" என்றேன். அதற்குப் பிறகுதான் அவள் சற்றே தெளிந்தாள். 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக' அவள் வளர்ந்தாள் என்று சொல்லவேண்டும். இரண்டே மாதங்களில் பூரண தெளிவு பெற்றுவிட்டாள். எப்போதாவது இடைக்கிடை அவனை நினைத்து ஏங்குவது குறையவில்லை. ஆனுலும் உண்பது உறங்குவது மட்டுமின்றி, பொழுது போக்குவதற்கும் தொடங்கி விட்டாள். இரண்டு வருடங்களில் இவள் மனம் மாறி ஒரு நல்ல கணவனைக் கைப்பிடித்து விடுவாள் என்பது என் திட்டம்! என் அதிர்ஷ்டம்-அவளுடைய அதிர்ஷ்டமுந்தான்! அடுத்த வருடமே இந்தியாவிலிருந்து வரும் ஒரு தினசரிப் பத்திரிகையில் வந்த புதினம் அவளை அடியோடுமாற்றி விட்டது! அந்தப் புதினத்தின் கதை இதுதான்:

"சிலந்தி'' என்ற எழுத்தாளனுடைய விவாகரத்து வழக்கில் அவனைப்பற்றிய பல செய்திகள் வெளியாயின. எட்டு மாதங்களின் முன்பு அவன் ஒரு பெண்ணைக் காதலித்து மணம் முடித்தானும். அவள் வயிற்றில் அவனுடைய பிள்ளை இருக்கையிலேயே அவளை விட்டு விட்டு யாரோ ஒரு சினிமா உப நடிகையைச் சரணமடைந்து விட்டானும். அந்தக் காதல் மனைவி விவாகரத்துக் கோரியிருக்கிருள். அந்தச் 'சிலந்தி' என்ற எழுத்தாளன் இலங்கையிலிருந்து சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு சென்னைக்கு வந்தானும். அதற்கு முன் இலங்கையிலிருக்கும்போதே **'பூங்குயில்' என்ற புனைபெயரில்**

பிரபல எழுத்தாளனுக விளங்கி ஞனும்!'

இந்தச் செய்தியைப் படித்த பிறகும் தன்னுடைய 'தெய்வீக'க் காதலை நினைத்து வருந்துவதற்குச் சித்திரா என்ன அனுசுயாவா?

நான் ஒன்றும் பேசவில்லை. பிறகும் ஒரு வருடம் மௌனமாகக் கழியவிட்டேன். அதன் பிறகு என்னுடைய நண்பரின் மகனை நானே தேர்ந்தெடுத்தேன். சிவகுமாரனுக்கு கதை எழுதத் தெரியாது; ஆனல் படித்துச் சுவைக்கத் தெரியும். பண்பு நிறைந்தவன். மாதம் அறுநூறு ரூபா சம்பாதிக்கும் உழைப்பாளி. இன்னும் உயர்வு பெறக்கூடியவன். நான் கேட்டதும் சித்திரா மறு பேச்சின்றி தன்னை அவனிடம் ஒப்படைத்து விட்டாள்.

இப்போது—

சிவகுமாரன் தன்னைமட்டுமல்ல, தன் அருமைப் புதல்வனையும் சித்திராவிடம் கொடுத்துவிட்டான்!

இந்த வீட்டில் இப்போது உண்மையான காதல் மணம் வீசுகிறது; இன்பம் சிரிக்கிறது!

# வளருந் தமிழ்

**விபச்சாரம்:** ஆசிரியர்: மா. சே. அருள்: திரு.வி. க. பதிப்பகம், 143/3 பிச்சாட்ஸ் லேன், மருதானை, கொழும்பு. விலை சதம் 40.

பசி, வறுமை, மடமை. இல்லாமை, கல்லாமை, தீண்டாமை, இலங்கையைப் பொறுத்த வரை குடியேற்ற வெளியேற்றச் சட்டங்கள் முதலியவை விபச்சாரத்தை வளர்க்கின்றன. காதல் திருமணம், நல்ல பெண்மணிகள் கணவனிடத்தில் தாசி மாதிரி நடத்தல், சட்டங்களை அமுல் நடத்த மக்கள், அரசாங்கத்துடன் ஒத்துழைத்தல் ஆகியவற்ருல் விபச்சாரத்தை ஒழிக்கலாம் என்கிருர் ஆசிரியர். ஆசிரியரின் தமிழ்நடை சில இடங்களில் சலிப்பை ஏற்படுத்துகின்றது. விபச்சாரத்தை ஒழிக்க விரும்புபவர்கள் இந்நூலை ஒரு தடவை படித்துப் பார்க்க வேண்டும்.

**மத்திய தீபம்:** (தீபாவளி மலர்) ஆசிரியர்: க. நித்தியானந்தராஜா, மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

மத்திய கல்லூரி மாணவர்களின் திறமையை எடுத்துக்காட்ட ஒவ்வொரு மாதமும் வெளிவரும் "மத்திய தீப"த்தின் ஐந்தாவது சுடர் தீபாவளி மலராக மலர்ந்துள்ளது. கலாநிதி வித்தியானந்தன் கலைப்புலவர் நவரத்தினம், டானியல், கவிஞர் செல்லையா, கனக-செந்திநாதன் ஆகியோரின் படைப்புக்கள் நன்ருக இருக்கின்றன.

**முரசம்:** (மாதமிருமுறை) ஆசிரியர்: எப். ஜி. ஜயசிங்கம்; செங்கலடி, இலங்கை;

'நமது நாட்டுச் செய்திகளை, அரசியல் நிகழ்ச்சிகளை, எம்மினத்தின் எழுச்சி மிக்க வரலாறுகளை மக்கள் மத்தியில் பரப்புவதற்கு கிழக்கு இலங்கையிலே ஒரு பத்திரிகை முக்கியம்' என்பதற்காக முழங்கத் தொடங்கியுள்ளது 'முரசம்'. தமிழரசுக் கட்சியினரின் தொண்டுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. புதிய பத்திரிகையை நாம் வாழ்த்தி வரவேற்கின்ருேம்.

சரா.

# அறிவரங்கம்.

## மாணவர் ஆற்றல் போட்டி எண் 5.

### விடைகள்

1. திருவள்ளுவராண்டு 1989.
2. கலைப்புலவர் நவரத்தினம்.
3. 2-ம் விமலதர்மசூரியன்.
4. வாழைச்சேனையில்
5. சிங்களரின் விளையாட்டுச் சபை (Sinhalese Sports Club)
6. திருவாரூரைக் குறிக்கும்.
7. ஹம்ஸத்வனி.
8. "ஹெறொடோட்டஸ்"
9. புரட்சி நடிகர் : எம். ஜீ. ராமச்சந்திரன்.
   நடிகர் திலகம் : சிவாஜி கணேசன்.
   நடிப்புப் புலவர் : கே. ஆர். ராமசாமி.
   இலட்சிய நடிகர் : எஸ் எஸ். இராஜேந்திரன்.
10. 23-வது அருளப்பர்.

**முதலாம் பரிசு**

பொ. கனகசபை,
மே/பா. P. C. பொன்னையா,
சிறுப்பிட்டி,
நீர்வேலி.

**இரண்டாம் பரிசு**

சே. சிவசுப்பிரமணிய சர்மா
தமிழ்க் கந்தையா வித்தியாசாலை,
சுன்னுகம்

**மூன்றும் பரிசு**

சி. யோகராசா
உடுவில் கிழக்கு
சுன்னுகம்.

◎ புதுவருடக் கலண்டர்கள் — டயறிகள்

◎ நத்தார்தின—புதுவருடதின வாழ்த்துக் கார்டுகள்

◎ பொங்கல் வாழ்த்துக் கார்டுகள்

பல டிஸைன்களில் கண்ணைக் கவரும் முறையில்
அழகாக வெளியிடப் பெற்றுள்ளன.

◎ பாடசாலைப் புத்தகங்களும் உபகரணங்களும் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

## விவேகானந்தா அச்சகம் — புத்தகசாலை

விவேகானந்தாக் கட்டடம்

யாழ்ப்பாணம்.

போன் : 517 (Ext 3 lines) *Grams :* PRINTERS

கிளை :-

230, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு

த. பெட்டி 853. தந்தி : விவேபிறெஸ்



# வெற்றிமணி

## சிறுவர் மாத இதழ்

கதைகள்—கட்டுரைகள்—கவிதை அரங்கம்—
பேனு நண்பர்கள் சங்கம்—மாணவர் மன்றம்—
மகளிர் பகுதி—நேயர்குரல்—மணியும் ஓசையும்
அறிவுப்போட்டி இன்னும் பல அடங்கியது.

தனிப்பிரதி -/20 சதம்

வருடச் சந்தா (ஆண்டுமலர் உட்பட) 2-50

## வெற்றிமணி

பூண்டுலோயா : : இலங்கை.

1-1-59 ஆண்டுமலர்—68 பக்கங்கள் மூவர்ண முகப்பு விலை 50 சதம்

இன்றே எழுதுக.

## எம்மிடம் வருக!

சகலவிதமான சில்க் -பெங்களூர்
பெனரிஸ் மைசூர் சாறித் தினிசு
களும் சேட்டிங் சூட்டிங் வகைக
ளும் சீத்தை வகைகளும்

## சில்லறையாகவும் மொத்தமாகவும்

நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

## Specialists in:

**BRIDAL AND SILK
REQUIREMENTS**

## க. சிற்றம்பலம் அன் சன்ஸ்

208, கே. கே. எஸ். ரேட் - யாழ்ப்பாணம்.

# கே. ஆர். லிங்கம்ஸ்

## கோப்பித்தூள் மிளகாய்த்தூள்

பாவிப்பாளர்கட்கு

இப்பொழுது மிகவும் முன்னேற்ற மான முறையில் தயார்செய்கிரேம். உங்கள் குடும்பத்துக்கு ஒரு பத்துச் சதப் பைக்கற் திருப்திஎன்பது உறுதி. சிக்கனமான முறையில் உங்கள் சாப்பாட்டைத் தயார்செய்ய எங்க ளுடைய தூள் வகைகளேப் பாவியுங் கள். எப்பொழுதும் திறமாயிருப்பது எங்களுடைய தூள்வகைகள் என் பதை மறந்துவிடாதீர்கள்.

## கே. ஆர். லிங்கம் மில்ஸ்

நீராவியடி, யாழ்ப்பாணம்.

விநியோகஸ்தர்கள்

## மில்க் வைற் சோப் வோக்ஸ்

527, கே. கே. எஸ். ரேட் யாழ்ப்பாணம்

FOR

SPECIALITY
MODERNITY
VARIETY AND
ECONOMY

SHOP AT

# Fancy House

*House of Repute for Fancy Goods*

68, Grand Bazaar - JAFFNA

**வாசகநேயர்களே !**

பொருளடக்கத்தில் இனம் சிரிக்கிறது என இருப்பதை "இன்பம் சிரிக்கிறது" என்று வாசிக்குக.

---

யாழ்-தமிழ் இலக்கிய மன்றத்திற்காக, திருநெல்வேலி சு. இராஜநாயகம் B. A. அவர்களால், யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதியிலுள்ள கலாநிலைய பதிப்பகத்தில் அச்சிடுவித்து வெளியிடப்பட்டது.
நிர்வாக ஆசிரியர்: சி. சரவணபவன் B. A.

# கலைச்செல்வி

பொங்கல் இதழ்

ஜனவரி 24-ல் வெளியாகும்

விசேட அம்சங்கள்

* பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்களின் கட்டுரை
* தேவருலகில் பேளு மன்னர்கள்
* புதிய தொடர்கதை
* ஈழத்தின் தலைசிறந்த தமிழ்ப் பேச்சாளர்கள்
* கூடார்த்தப் படங்கள்

மற்றும் கதைகள், கவிதைகள், கட்டுரைகள் ஆகியவற்றுடன் அதிக பக்கங்களில் அழகாக வெளியாகும்.

**தனிப்பிரதி: 35 சதம்தான்**

ஏஜண்டுகள் தங்கள் தேவைக்கு,
1-1-59க்கு முன் அறிவிக்க வேண்டும்.


## கலைச்செல்வி

தமிழ் இலக்கிய மன்றம்

சுன்னுகம் : : இலங்கை.

Registered at the G. P. O. as a News Paper. KALAICHELVI

KANDERODAI



செல்லம்ஸ்

கவர்ச்சியான படங்கள் பிடிக்க ஏற்ற ஸ்டூடியோ